ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 31—1—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 33

எங்கள் தாய்வீட்டுச் சொத்து!

கவிஞன் பிறக்கிருன்; செய்யப் படுவதில்லை. தமிழகத்திலே எழுத்து வாசனையே இல்லாதவர்கள், பெருங் - கவிஞர்களாக இருந்திருக்கிருர்கள்; இருக்கிருர்கள். அனுபவ முத்திரை கருத்தாகி, பேச்சு மொழி வளமாகி உருவம் பிடிக்கின்றன. பழுதறக் கற்ற தமிழ்க் கவிஞர்களின் கற்பனைகளைக் காட்டிலும் படிப்பறிவு இல்லாத இந்தக் கவிஞர்களின் கற்பனை இருதயத்திலே மங்கிக்கிடக்கும் உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிறது. கவிதை இங்கே இயற்கைத் தன்மை படைக்கிறது. இலக்கியமே அற்புத நடமிடுகிறது. இங்கே பெண்களே பெருங்கவிஞர்கள். வீட்டிலோர் தனியிடம் அவர்களது கலாமண்டபம். தொட்டில் அவர்களது தாளவாத்தியம். தொட்டிலில் கட்டப்பட்ட வளையம் அவர்களது மெல்லிசைக் கருவி. தொட்டிலில் கைகால்களை அசைத்தபடி கிடக்கும் அறிவறியாப் பிஞ்சு அவர்களது ஒரே ரசிக நேயர். அந்த உலகம் மிகவும் குறுகியது. கைதட்டுவோர் அங்கே இல்லை. காசு நோடுப்போர் கிடையாது. களை கட்டுவதாகப் பாராட்டும் சங்கீத பூஷணங்கள் இல்லை. தளை தட்டுவதாகக் குறைப்படும் புலமைச் சிகாமணிகளும் இல்லை. ஆனுலும், மகா கவிஞர்களின் காவியங்களோ, கோகிலகான இசைவாணிகளின்குயிற்குரலோ, செய்யமுடியாத ஓர் அரும்பெரும காரியத்தை அந்தக் 'கரண்டிபிடி' கவிஞர்களின் பாடல் செய்து விடுகிறது. ஆம்! அவர்கள் குழந்தைகளைத் தூங்கவைக்கிருர்கள். தூங்குகிற குழந்தைகளை அழவைக்கும் சங்கீத வித்வான்களின் கச்சேரி. ஆனுல் அழு மூஞ்சிக் குழந்தைகளையும அமர்த்திவிடும இந்த அன்னைக் குலத்தின் தாலாட்டு தாய் பாடும் தாலாட்டு குழந்தைக்குப் புரியாது. புரிகின்ற வயது வந்ததும் அந்தத் தாலாட்டுக கேட்கக் கிடைக்காது. அதனுல்தான் தாய்மார்களின் மகத்தான கவிதைக் களஞ்சியங்களெல்லாம் பலரது காதுகளில் விழாமற் போய்விட்டன. எழுத்துருவில் இல்லாததால் பலர் கண்களில் படாமற் போய்விட்டன. அதைப் படவைப்பதுதான் தோழர் **தமிழண்ணல்** தொகுத்திருக்கும் **தாலாட்டு** என்ற நூல்.

புகைப்படம்: **பொன். செல்லதுரை, திருக்காட்டுப்பள்ளி.**

மிகச் சிறந்த நூல்களுக்கு 'தென்றல்' பெருமதிப்புரை வழங்கும் பகுதியில் இது இரண்டாவதாகும். முதலில் வந்தது அறிஞர். பா. வே. மா. அவர்கள் எழுதிய "கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்" என்ற நூல் பற்றியதாகும்.

★ ★ ★ ★

பாண்டிய நாடு, சோழ நாடு, ஈழ நாடு, நாஞ்சில் நாடு, தென் பாண்டி நாடு, கொங்கு நாடு எனப் பலவகைப்படும் தென்னவன் தாய் நாட்டுப் பிரிவுகளிலிருந்தெல்லாம் தாலாட்டுப் பாடல்களைச் சேகரித்து அழகிய முறையில் வெளியிடச் செய்திருக்கிருர் தோழர் தமிழண்ணல்.

பாண்டிய நாட்டுத் தாய் ஒருத்தி, தன் குழந்தையைத் தூங்கவைக்கிருள் தாலாட்டுப் பாடி. சும்மா கிடந்த குழந்தையா? அழுது கதறிய குழந்தை! ஏன் அழுகிறது என்று தாய்க்குத் தெரியாது. காரணத்தைச் சொல்லக் குழந்தையால் முடியாது. அழுதால் பால் கொடுக்க வேண்டும். கொடுத்தும் பார்த்தாள் தாய். அழுகை நிற்கவில்லை. காரணம் புரியாத தாய்க்குக் கலக்கம் மேலிடுகிறது. யாரும் அடித்தார்களோ? யாரும் கடிந்தார்களோ? ஐயோ!

ஆரடித்தார் ஏனழுதாய்?
அடித்தாரைச் சொல்லியழு!
கண்ணேஎன் கண்மணியே
கடிந்தாரைச் சொல்லியழு!

—என்று குழந்தையைப் பார்த்துக் கேட்கிருள், பதில் இல்லை! முகத்தைப் பார்க்கிருள். "என் கண்ணே நான் விளக்கிலிட்ட வெண்ணெயைப் போல் வெந்துருகி நிற்கையிலே கலத்திலிட்ட சோறதுபோல் கண் கலக்கம் தீர்த்தாயே! இப்போது ஏனழுகிருய்? சொன்னுல் உன் கலக்கத்தைத் தீர்க்க நான் வழி காணுவேனே! சொல்லம்மா!"— அப்போதும் பதில் இல்லை.

கொம்புக் கனியே
கோதுபடா மாங்கனியே!
வம்புக்-கழுதாயோ
வாயெல்லாம் பால்வடிய!

— 9-ம் பக்கம் —

கண்ணதாசன்

சென்ற இதழில் 'மனைவிக்கு' என்று நாகமுத்தையா எழுதிய கட்டுரைக்கு, பதில் கடிதம் எழுதியிருக்கிறார் பாபநாசம் பரசுராமன். இவரைப் பின்பற்றி மனைவியின் இடத்திலே இருந்து 'கணவர்க்கு' எழுதுவோர் இலக்கிய எடுத்துக் காட்டோடு தென்றல் அரைப் பக்க அளவுக்கு எழுதுக.

கணவர்க்கு...

— பாபநாசம் பரசுராமன் —

அன்புத் துணைவா,

அவசியமற்ற அடைமொழிகளை இணைத்து, உவமைகள் பல பிணைத்து அதன்மூலம் தங்களது எல்லையற்ற பற்றையும்-பாசத்தையும் காட்டிக்கொள்வதாக நினைத்து சில பலர் தீட்டும் அந்தப் பத்தாம்பசலி நடை எனக்குப் பழக்கமற்றது என்பதை நீங்களே யறிவீர்கள். எனவே தேவையற்ற அவைகளுக்குச் சீட்டுக்கிழித்துத் தந்துவிட்டு வழக்கம் போல் என் நெஞ்சத் துடிப்பை மட்டும் எழுத்தாக்கி வைக்கிறேன்.

சிறிதும் பெரிதுமின்றி, நறுக்கான சொற்கூட்டோடு, நாசூக்கான நடையிலே அமைந்த உங்களது கடிதம் கிடைத்தது. அது சுமந்து வந்த செய்தி என் சிந்தையிலே கப்பியிருந்த சோர்வையும், சோகத்தையும் சுட்டு நீறாக்கிவிட்டு இன்பநினைவுகளுக்கு என்னை இட்டுச் சென்றுவிட்டது!

கோணல் வாழ்க்கையிலிருந்து தாங்கள் நேர்வழித் திரும்பிய செய்தியறிந்து நெஞ்சம் களிக்கிறேன். அண்டை அயலாரின் அலருரையினின்றும் என்னைத் தப்புவிக்கத் தாங்கள் விரைந்து வரும் சேதி கேட்டுச் சித்தம் குளிர்கிறேன். சீரும், சிறப்பும் மிக்க தங்கள் வாழ்வு, சேறும் சக்தியும் நிறைந்த விஷக்குட்டையிலேயே நிரந்தரமாகச் சிக்கிச் சிதைந்துவிடுமோ என்று என் உள்ளம் பட்ட பாட்டை எழுத்துக்களிலே காட்டிவிடமுடியுமா...?

'விளக்கொளியும்...' என்று தொடங்கும் சமண முனிவரின் அந்த நாலடிச் செய்யுளின் மெய்ப்பொருளினை இப்போதாவது உணர்ந்தமை கண்டு மிக்க மகிழ்ச்சி. விஷச்சிலந்தி விரித்துவைத்த வலையிலே சிக்கிவிட்ட வண்டும், விலைமகளிர் தம் விழிவீச்சிலும், மொழி வீச்சிலும் நெஞ்சைத் தொலைத்துவிட்ட ஆண்மகனும் அனேகமாகத் தப்புவதே இல்லையாம்! ஆனால், நீங்கள் தப்பியதை-நெளிந்துபோன வாழ்வை மீண்டும் நிமிர்த்திக்கொண்டதை யறிந்தும் என் உள்ளம் மகிழ்ச்சிக் கூத்தாடியது!

வேசியர் காட்டும் பாசம் வெறும் வெளிவேஷம். வானவில்லின் வாழ்வினைக் கொண்டது. சதையிருக்கு மட்டும் பிய்த்துத் தின்றுவிட்டு கொட்டையையும் சப்பியெறியும் வௌவாலின் பண்பு படைத்தது! தனம் இருக்கு மட்டும் தளுக்குக் காட்டி மடியின் கனம் காலியானதும் கதவை இழுத்துச் சாத்தும் பண்புகொண்டோர் பரத்தையர்!

ஆனால், குலமகள் அப்படி அல்ல. அவள் என்றும் இன்பம் பெய் தளிக்கும் சீதளப் பொன்னிலவு. 'கையற்ற கண்ணே அறும்' வேசியரின் நேசமல்ல அவள் காட்டும் பாசம். அது என்றும் நிலைத்து நிற்கும் விசுவாசம். நெய் இருப்பினும் இல்லாவிடினும் அணைந்து நின்றெரியும் மங்காத ஒளிவிளக்கு!

சென்ற கடிதத்திலே தங்களைச் சற்றுக் கடிந்து எழுதிவிட்டேன். 'வாளற்றுப் புற்கென்ற கண்ணும்,' தாங்கள் சென்ற 'நாளொற்றித் தேய்ந்த விரலும்' தான் பொறுமைக் கீற்றுக்களால் வேய்ந்திருந்த என் இதயக் கூரையையும் பொத்துக்கொண்டு அத்தகு சொற்களைக் கொட்டும் படிசெய்துவிட்டன. நான் என்ன செய்யட்டும்? மன்னித்துவிடுங்கள்.

தங்களின் பிரிவு என்னை எவ்வளவு தூரம் வாட்டுகின்றது தெரியுமா? பிரிவாற்றாமையின் கொடுமையினைப் பற்றி சங்க இலக்கியங்களில் நான் படித்திருக்கிறேன். தலைவன் பிரிவால் தேய்ந்துபோன தலைவியின் தேகத்தையும், மெலிந்த தோளினையும், கழன்று விழும் வளையல்களையும் பற்றிக் கலித்தொகை காட்டிடக் கண்டிருக்கிறேன். குறள் கூறிடக் கேட்டிருக்கிறேன். ஆனால் அதை அனுபவ வாயிலாகவே அறிந்திடுகின்ற வாய்ப்பு இப்பொழுது எனக்குக் கிடைத்திருக்கிறது.

> 'பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
> தொல்கவின் வாடிய தோள்.'
>
> (அதி : உறுப்பு நலனழிதல்)

> 'துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
> இறை இறைவா நின்றவளை.'
>
> (அதி : பிரிவாற்றாமை)

வள்ளுவர் காட்டுகின்ற 'இன்பத்'திலே காணப்படும் இவ்விருகுறள்களும் தம்முள் எத்தனை உண்மையை ஒளித்துக்கொண்டிருக்கின்றன தெரியுமா? மிகைபட விளம்பல்(Exaggeration)சிறிதுமின்றி உண்மையைத் தெள்ளத்தெளிய எத்தனை அப்பட்டமாக வள்ளுவர் எடுத்துரைத்திருக்கிறார் என்பதை எண்ணும்போது வியப்பு மேலிடுகிறது. தாங்கள் என் கைக்குப் பிடிப்பாகச் செய்து அணிவித்திருந்த பொற்றொடிகள் இன்று என் கையிறைவிட்டு நழுவிக் கழல்கின்றன அத்தான்!

நாட்கள் ஓடுகின்றன; நாட்குறிப்பின் தாட்கள் கிழித்தெறியப்படுகின்றன. நாளும் நான் தங்கள் வருகையை எதிர்நோக்கி வழியிலே விழிபதித்து வாயிலிலே காத்து நிற்கிறேன். இணைபிரிந்த அன்றில், கொழுநன் துணையிழந்த குலப்பெண் உயிர்வாழ்தல் எத்துணைக் கடினம் என்பது தங்களுக்குத் தெரியாததா?

விரைந்து வாருங்கள். நிறைந்த அன்பை நெஞ்சிலே தேக்கி நிற்கிறேன். உங்கள் பனிப்பார்வையிலே, கனிச்சுவைப் பேச்சிலே தங்கள் பிரிவு தந்த வேதனை மறைந்தொழியட்டும்! உங்கள் மெய் தொட்டு மலரத்துடிக்கும் என் ஆசை மொக்குகள்...வாய்த்தேன் பட்டு நனையத் தவிக்கும் செவ்விதழ்கள்...நான் சொல்லியா தெரிந்து கொள்ளவேண்டும்...? சிந்து பாடும் 'தென்றலை'க் கேளுங்கள். அதுகூட பதில் சொல்லுமே!

ஓடிவாருங்கள் அத்தான்! கூதலின் கொடுமையும், என் உள்ள நிலைமையும்கூட இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா...?

தங்கள் ஆசை மனைவி,

முத்து-கமலி

நாகமுத்தையாவின் முதற் கடிதத்துக்கு பதில் கடிதம் ஒருவர் எழுதியுள்ளார். இந்த இரண்டாவது கடிதத்துக்கு 'மனைவியின்' இடத்தில் இருந்து பதில் கடிதம் எழுதுவோர் எழுதுக. ஆனால், இலக்கிய எடுத்துக் காட்டோடு எழுதுக.

கடிதம் 2

மனைவிக்கு...

— நாகமுத்தையா —

அன்புக் கமலாவிற்கு,

ஆஸ்பத்திரியில் கிடக்கும் சீக்குக்காரன் டிஸ்சார்ஜ் ஆகி வெளியேறத் துடிப்பதுபோல இங்குள்ள அவஸ்தைகளை முடித்துக் கொண்டு வீடுவந்துவிடவேண்டும் என்று நான் துடியாய்த் துடிக்கிறேன். இதை நீ உணர்ந்தோ உணராமலோ இரண்டாவது போர்முனையைத் துவக்கி இருக்கிறாய்.

> 'நாடகமே உலகம்—அதில்
> நாளை நடப்பதை யார் அறிவார்?'

என்று அடுத்த வீட்டு மாரிசாமி அழகாகப் பாடுவான். நான் ஆயிரந்தடவை அந்தப் பாட்டை அவன் வாயாலேயே பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் நீயோ பாட்டை மாற்றி இருக்கிறாய்.

> 'நாடகமே உடம்பு—இதில்
> நாளும் நடப்பதை யார் அறிவார்?'

பாட்டு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இது திருத்தமா அல்லது பிரதிபாடமா என்பதுதான் தெரியாமல் திகைக்கிறேன். நீ தமிழ்ப் படித்தவள். எனவேதான் உன் பாட்டில் அழுத்தம் சற்று அதிகமாகவே இருப்பதை உணர்கிறேன். என்னை நினைத்து நினைத்து மருள்கின்ற உன் நெஞ்சம் நெடுந்தொலைவு தாண்டி நான் இருக்குமிடத்தைக் கற்பனையால் பிடிக்க முயல்வதையும், நெஞ்சோடு கண்களும் கடல்தாண்டித் திரிய ஆசைப்படுவதையும், கால்கள் கால்நடையாக நடந்தேனும் என்னை அடைந்துவிட வேண்டுமென்று துடிதுடிப்பதையும் நாடக அபிநயங்களாகக் கருதி நாடகமே உடம்பு என்று எழுதுகிறாய் போலும்.

நண்பர்கள் இல்லாத ஊரில் வாழ்வது துன்பம். அதிலும் மனதிற்குகந்தவளைப் பிரிந்துவிட்டு வாழ்வது இருக்கிறதே அது துன்பத்தில் எல்லாந் தலை. அத்தகைய துன்பத்தில்தான் நான் வாடி வதங்குகிறேன் என்றால் நீ கைவளை கீழே விழுகிறது, கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது என்ற செய்திகளைப் படம்பிடித்துக் காட்டுகிறாய்.

சென்ற வாரம் இங்கிருந்து கப்பலேறிப் புறப்பட்ட கண்ணப்பன், நான் வேசியரோடு மலைப்பிரதேசத்தில் சுற்றித்திரிவதாகச் சொன்னான் என்று எழுதி இருக்கிறாய். உண்மைதான். நான் அவளை—ஏன் யோசிக்கிறாய்?—அவள்தான் இங்கிருக்கும் வேசி மகள் வேசியை—மலைப்பிரதேசத்திற்கு அழைத்துச் சென்று உன்னைப் பிரிந்ததால் உண்டாய பசலை நோயைத் தணித்துக்கொள்ளலாம் என எண்ணினேன். இவ்வெண்ணத்தை நண்பன் என்ற முறையிலே கண்ணப்பனிடம் சொன்னேன். அவன் 'நிஜமாகவே அழைத்துப் போயிருக்கிறேன்' என்று நம்பிவிட்டான். அவனுக்கு உண்மை எப்படித் தெரியும்?

'மலைநாட்டுக்கு வருகிறாயா?' என்று 'அவளை'க் கேட்டேன். சிறிது தயங்கினாள். யோசித்தாள்.

'நீ உடன் வராவிட்டால் மலைமீது இருந்து வீழ்ந்து மடிந்துவிடுவேன்' என்று பயங்காட்டினேன்.

'நானும் உடனே புறப்பட்டு வந்து உங்களோடு உடன் வீழ்ந்து சாகத் தயங்கமாட்டேன்' என்றாள் அந்தச் சாகசக்காரி. அப்போது என்னிடம் காசுபணம் இருந்தது. காசுபணம்இல்லாத நிலையில் மறுபடியும் ஓர்முறை அவள் வீட்டுக்குச் சென்று மீண்டும் கேட்டேன்.

'மலைநாட்டுக்கு வருகிறாயா?'

'வர இப்போது சவகாசப்படாது' என்று அப்பட்டமாகச் சொல்லிவிட்டாள் அந்தத் தளுக்குக்காரி.

'நீ வராவிட்டால் நான் மலைமீது இருந்து வீழ்ந்து மடிந்துவிடுவேன்' என்று பயங்காட்டினேன்.

'அதுபற்றி எனக்குக் கவலையே இல்லை. என் காலில் இப்போது வாதநோய் இருப்பதால் என்னால் ஒரு அடிகூட வெளியே அகல முடியாது' என்றாள் உடலைக் கருக்கி உயிரை வளர்க்கும் உத்தமி.

இதுபோன்ற நிகழ்ச்சி இன்று நடக்குமென்று அன்று வெகு நாட்களுக்கு முன்பே தமிழ் அறிஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நாலடியாரில் இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்று கவிதையாக்கப்பட்டிருக்கிறது. இதோ பாடல்.

> **''அங்கோடு அகல்அல்குல் ஆய்இழையாள் நம்மொடு**
> **செங்கோடு பாய்துமே என்றாள்மன்—செங்கோட்டில்**
> **மேல்காணம் இன்மையால் மேவாது ஒழிந்தாளே**
> **கால்கால்நோய் காட்டிக் கலுழ்ந்து.**

மலைஉச்சிவரை உடன் வந்தவள் கையிலே காசு இல்லை என்பதை உணர்ந்தவுடன் காலிலே வாதநோய் இருக்கிறது என்று சொல்லி அழுது ஒழிந்துகொண்டாளாம். எப்படி இருக்கிறது அன்பின் வேகம்?

இத்தகையாளின் வலையில் வீழ்ந்து மோசம் போனதற்குப் பெரிதும் வருந்துகிறேன். விருப்பத்திற்கு உரியவளே, விரைவில் வந்து சேர்கிறேன். பொறுத்தருள்!

உன்னன்புள்ள,

மாவண்ணன்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 31-1-56 | இதழ் 33

சுயமரியாதை எங்கே ?

தமிழகத்தோடு சேர வேண்டிய தேவிகுளம், பீர்மேடு—பகுதிகளை நேருப் பண்டிதர் கேரளத்தோடு சேர்த்துவிட்டதை எதிர்த்துத் தென்னாடெங்கும் கண்டனக் குரல் பரவி நிற்கிறது. நேருப் பண்டிதரின் இந்த எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்து, நேருவின் படத்தைப் பூஜை செய்தோர்கூடப் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள். அவ்வளவு பெரிய அநீதியை நேரு தமிழர்களுக்கு இழைத்துவிட்டார். டில்லி சர்க்காரின் இந்த ஏகாதிபத்திய நடத்தையைக் கண்டிக்கும் வகையில் சென்னை மந்திரிகள் ராஜினாமாச் செய்ய வேண்டுமென எல்லாக் கட்சிக்காரர்களும் கர்ஜித்திருக்கிறார்கள். சென்னை மந்திரிகளில் பெரும் பகுதியினர், மக்களின் இந்த முழக்கத்திற்குப் பதில் கூற முன்வரவில்லை. ஆனால், சென்னை மந்திரி சபையின் முதுகெலும்புகள் நாங்கள்தான் என மனதுக்குள்ளேயே எண்ணி எக்களித்திருக்கும் மீஞ்சூர் பக்தவத்சலனாரும், நிதி மந்திரி சுப்ரமணியமும் மக்களுக்குப் பதில் சொல்லவும் முன் வந்திருக்கிறார்கள். அவ்வளவு நெஞ்சுரம் அவர்களுக்கு! ஏமாற்றப்பட்ட மக்களை ஏளனம் செய்யவும் துணிந்திருக்கிறார்கள் அந்தக் கனம்கள்.

ஏமாற்றமடைந்த அரசியல் வாதிகள்தான் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மீஞ்சூரார் சொல்லியிருக்கிறார். போராட்டம் நடத்துவோர் ஏமாற்றம் அடைந்தவர்களாம்! கூறுகிறார் நண்பர் 'பத்து லட்சம்'! ஏமாற்றமடைந்தவர்கள் யார்? மக்களால் நம்பிக்கையற்றவரென்று தூக்கி யெறியப்பட்டவர் யார்? பொதுத் தேர்தலிலே 'பதம்' பார்க்கப்பட்டவர் யார்? தோல்விச் சக்தியிலே திருப்பித் திருப்பிப்போட்டு அமிழ்த்தப்பட்ட அந்தச் 'செல்லாக்காசு' மனிதர்தான் துள்ளிக் குதித்திருக்கிறார். ஏமாற்றப்பட்ட அரசியல் வாதிகள்தான் போராட்டம் நடத்துகிறார்கள் என்று. தாயகத்தைத் தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள்; தாய்மொழியை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்; அதிலே அக்கறையைக் காணவில்லை. 'மந்திரி பதவியை ராஜினாமா செய்' என்றா உடனே கர்ஜிக்கிறார் கனம். அப்பப்பா! அந்த மந்திரி ஆசனத்தில் என்னதான் இருக்கிறதோ தெரியவில்லை!

மீஞ்சூர் மிராசுதார்தான் தலைதெறிக்கக் குதிக்கிறாரென்றால், கோவைப் பணக்காரருமல்லவா 'ததிங்கினத்தோம்' போடுகிறார்! தான் பதவியை ராஜினாமா செய்வதினாலே டெல்லியின் முடிவை மாற்ற முடியுமானால், தன்னுடைய மந்திரி பதவியை ராஜினாமா செய்வதற்குத் தயார்தானாம். நிதியமைச்சர் சுப்ரமணியத்தின் கூற்று இது. தமிழகத்தின் கண்டனத்தைத் தெரிவிக்கும் முகத்தான் பதவியை ராஜினாமா செய்யுங்கள் என்றால் அதற்குக் காரணம் சொல்கிறார் கோவைச் சீமான்.

டெல்லியின் மனதை மாற்ற முடியாதாம்! அவரே சொல்கிறார் நேருவின் பிடிவாதத்தைப்பற்றி. டெல்லியின் தவறை அமைச்சர் மறுக்கவில்லை. ஆனால் டில்லியின் மனதை மாற்ற முடியாது என்பதற்காக ராஜினாமா செய்ய மறுக்கிறார். அத்தகு பிடிவாதம் பிடித்தவரின் கீழ் ஏன் பதவியிலிருக்க வேண்டும்? கொஞ்சமாவது தன்மானம் வேண்டாமா? ஈ, எறும்புக்குக்கூட ரோஷமிருக்கிறதே !

நேருவின் மனதை மாற்ற முடியாதாம்! ராஜினாமா செய்துவிட்டலல்வா இந்த வீராப்புக்களை அவிழ்த்துவிட வேண்டும் ?

சென்னை மந்திரிகள் ராஜினாமா செய்துவிட்டால் டெல்லி சர்க்கார் என்ன செய்யுமென்று நினைக்கிறாரோ அமைச்சர் தெரியவில்லை. நிச்சயமாக டெல்லி சர்க்கார் கவர்னர் ஆட்சியை ஏற்படுத்தக்கூடும். தமிழ் மக்கள் ஒரு முகமாக நின்று இறுதிவரை தேவிகுளம், பீர்மேடு தகராறை எதிர்த்தால் பண்டிதர் தானாகவே பின் வாங்கக்கூடும். சென்னை மந்திரிகள் ராஜினாமா செய்தால் நிச்சயமாக அடுத்து நடக்கப் போவது கவர்னர் ஆட்சிதான். இதை விடுத்து கனம் சுப்ரமணியம் ஏன்தான் பின் வாங்குகிறாரோ தெரியவில்லை. அது மட்டுமல்ல, சுப்ரமணியம் தன்னுடைய அடிமைப்புத்தியையும் வெளிக் காட்டியிருக்கிறார். சென்னை வற்புறுத்தாமல் இருந்ததால்தான் கூடலூர் பகுதி தமிழ் நாட்டுக்குக் கிடைத்ததாம். இன்றேல் அதுவும் போயிருக்குமாம்! கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் டில்லியின் அநீதியை சுப்ரமணியம் உணர்ந்தும் தவறாக நடக்கிறாரென்றால் அவரிடம் அடிமைத்தனம் வேரூன்றி விட்டிருக்கிறது என்றுதான் பொருள் !

தான் கொண்டு வந்த தீர்மானங்கள் அவையிலே தோல்வி கண்டுவிட்டதற்காக எத்தனையோ மந்திரிகள் மேலை நாட்டில் ராஜினாமா செய்திருக்கிறார்கள். மறுத்தோர் துரோகிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அபூர்வப் பிறவிகளுக்கு இது தெரியாததல்ல!

ஈழத்துக் கவிஞர்கள்

"பறத்தமிழனா"? மறத்தமிழனா..?

"ராஜபாரதி"

5

மொழியை விழியாய்க் கொண்டாடும்
'மூத்த குடியோர்' தீரத்தால்
சுனியை எதிர்த்து நீரோடிச்
சுருவைக் கிழித்து, முத்தள்ளிக்

"இனியோ பத்ரா" நாடெல்லாம்
கேண்மைச் சந்தை யாக்கியநீ
"ஒழிக தமிழ்" என் றுறுப்பார்முன்
உறைவா ளோடா, தாழ்கின்றாய்...?

"பறையத் தமிழன்" என்றுன்னைப்
பகிரங் கத்தே இம்சித்த
கறையைக் களைய முனையாமற்
'களனிக் கூட்டம்' போவாயோ...?

முறையிட்டா உன் உயிரன்ன—
மொழியைக் காக்க முயல்கின்றாய் ?
அறையிற் கூடிப் பேசாதே...
ஆக்கம் வேண்டித் திரண்டோடு

சங்கம் ஆய்ந்த பலகையிலே
சட்டம் படித்த தமிழா ! உன்
தங்கந் தோய்ந்த தமிழ்தன்னைத்
தாழ்வாய்ப் பேசும் நிலைகண்டும்

பொங்கி எழுந்து பாயாமற்
புலம்பும் பெட்டை நாயா, நீ... ?
சிங்கம் பிளந்த கணையெங்கே
சேரன் தொடுத்த வில்லெங்கே...?

புரட்சிக் கவிஞ னுனக்காகப்
போரின் சங்க மார்க்கின்றான் !
அருட்சிக் கவிகள் பலபாடி
அனலின் பொறிகள் தெறிக்கின்றான்

உரித்த பழமா உவக்கின்றாய் ?
ஓடிப் போ,உன் மொழிகாக்க
விரித்த வலையில் சிக்காமல்
வீரப் பாய்ச்ச லிட்டோடு...

வெண்பாப் போட்டி 23

ஈற்றடி : கூடிக் கெடுப்பார் குணம்

முடிவு தேதி 14-2-55.

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்
சென்னை-6

நன்றி உரை

எனது செல்விகள் மணிமேகலை—அழகுராணிக்கு அறிஞர் அண்ணா அவர்களால் எழுத்தறிவிக்கப்பட்ட விழாவில், எனது அழைப்பிற்கிணங்கி பங்குகொண்டவர்கள், வாழ்த்துரை வழங்கியவர்கள், தந்தி அஞ்சல் மூலம் நல்லுரை கூறியவர்கள், நாதசுர இசை விருந்து அளித்து மகிழ்வித்த நாதசுர சக்கரவர்த்தி டி. என். இராஜரத்தினம் அவர்கள், ஆகிய அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
எஸ். எஸ். பி. லிங்கம்
(வேதாசலம்)

இனத் துரோகப் பத்திரிகைகளை வாங்காதீர்கள்!

டாக்டர் மு. வரதராசனார் அழுத்தமாகச் சொல்கிறார்

'தமிழ்நாடு' பொங்கல் மலரில் டாக்டர் மு. வ. அவர்கள் எழுதிய கட்டுரை இது. தமிழ் நாட்டுச் செய்தித்தாள்கள் சிலவற்றின் பிற்போக்குக் கொள்கையை— நல்ல செய்திகளை இருட்டடிப்புச் செய்யும் இழிநிலையை இக் கட்டுரையில் விவரித்துள்ளார்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை"

உயிர் வாழ்க்கைக்கு மழை எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்க வந்த இடத்தில் திருவள்ளுவர் பாடியது இது. உயிர் உடம்போடு ஒட்டி வாழ்கின்ற வாழ்க்கைக்கு முதல் காரணம் இது. ஆனால் நல்ல அரசியல் இருந்தால்தான், அந்த உயிரும் உடம்பில் அமைதியாக வாழமுடியும். ஆகவே நல்ல அரசியலும் மிக மிகத் தேவையானதாக உள்ளது. அரசியல் வாழ்க்கையில் கெடுக்க வல்ல செல்வாக்கு உள்ளது எது, கெட்டவர்களைக் கைதூக்கி எடுக்க வல்ல ஆற்றல் உள்ளதும் எது என்று எண்ணிப்பார்த்தால், செய்தித்தாள் என்று சொல்லலாம். ஆகவே, உயிர் வாழ்க்கைக்கு மழை எப்படி அடிப்படையோ, அப்படி அரசியல் வாழ்க்கைக்குச் செய்தி இதழ் (பத்திரிகை) அடிப்படையாகவுள்ளது எனலாம்

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் செய்தி இதழ்"

என்று பாடி உணரத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு செய்தித்தாள் ஆக்கமும் கேடும் வல்லதாக விளங்குகிறது.

பழங்காலத்தில் மக்கள் அரசனை நம்பினார்கள்; அரசன் அறததை நம்பினான். இந்த நம்பிக்கை இருசாராரையும் காத்து வந்தது. இந்தக் காலமோ, நம்பிக்கைக்கு அவ்வளவாக இடந்தராத காலம். ஆராய்ச்சி மிகுந்துள்ள காலம் இது. (நம்பிக்கை அடியோடு தொலைந்துவிட்டது என்றோ, ஆராய்ச்சியே எங்கும் உள்ளது என்றோ கருதலாகாது; மிகுதி என்றே கருதவேண்டும்.) இந்தக் காலத்திலும் அமைச்சர்களிலும் மற்றவர்களிலும் சிலர்க்கு அறத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அறத்தை நம்புவதைவிட மிகுதியாகக் கட்சிச் செல்வாக்கையே நம்புகிறார்கள். மக்களும் ஆட்சித் தலைவர்களை நம்புவதைவிட மிகுதியாகப் பணத்தையே நம்புகிறார்கள். கட்சிச் செல்வாக்கும் பணப்பெருக்கமும் நிலையில்லாதவை; அடிக்கடி மாறக்கூடியவை. ஆகவே, இந்த நம்பிக்கைகளும் நிலைபெறாமல் அடிக்கடி மாறுகின்றன. அதனால் நம்பிக்கை வலிமை இழந்துவிட்ட காலம் என்று இதனைக் குறிப்பிடலாம்.

அரசனுக்கும் மக்களுக்கும் இடையே நின்று இரு சாராரையும் பிணைக்க வல்லதாகவும் திருத்த வல்லதாகவும் பழங்காலத்தில் விளங்கியது படை. அரசனுக்குக் காப்பாக இருந்தது படை. படையில் இருந்த வீரர்கள் எல்லோரும் அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்ல; மக்களிடையிலிருந்து வந்தவர்கள் அவர்கள். ஆகவே மக்கள் படையை வெறுக்கமுடியாது; அரசனும் படையைப் புறக்கணிக்க முடியாது.

பழங்காலத்தில் படைக்கு இருந்த ஆற்றலும் சிறப்பும், இக்காலத்தில் செய்தித்தாள்களுக்கு உள்ளன. மக்களாட்சியில் உண்மையான படை பத்திரிகையே என்பதை உணர்ந்த காரணத்தால்தான், அணுக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்துள்ள அமெரிக்க அரசாங்கமும் 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' முதலான பத்திரிகைகளுக்காக வெளிநாடுகளிலும் ஏராளமான பணத்தைச் செலவு செய்து நடத்தி வருகின்றது. அணுக்குண்டைவிட செய்தித்தாள்களுக்கு ஆற்றல் மிகுதி என்பதை அந்நாடு உணர்ந்துவிட்டதே இதற்குக் காரணம்.

இவ்வளவு ஆற்றல் வாய்ந்த செய்தித்தாள் மக்களின் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் ஒளிக்காமல், மறைக்காமல் உணர்த்திவரும் கருவியாக இருந்தால் மக்களாட்சியை நல்ல முறையில் காப்பாற்ற முடியும். மக்களின் தேவை பற்றிய உணர்ச்சிகளும் கருத்துக்களும் தக்க முறையில் வெளிபபட வழி இல்லாதபோதுதான், சதிக்கூட்டமும் கொடுஞ்செயல்களும் வளரத் தொடங்குகின்றன. செய்தித்தாள் தக்கமுறையில் மக்களின் தேவைகளை உணர்த்தி வருமானால், சதிகளையும் கொடுமைகளையும் பற்றிய எண்ணமே தோன்றாதபடி மக்களாட்சியைக் காத்துச் செல்ல முடியும்.

ஆனால் தமிழ்நாட்டுச் செய்தித்தாள்கள் பல இந்த வகையில் தொண்டு செய்யவில்லை என்றால், அதற்குக் காரணம் தமிழரின் உயர்ந்த பண்பாடே எனலாம். பாம்புக்கும் பால் வார்ப்பது போன்ற பண்பு, தீங்கு இழைப்போர்க்கும் நன்மை நாடும் மனப்பான்மை தமிழர்க்கு இருப்பதால்தான் இவை தமிழ்நாட்டில் வாழமுடிகின்றது. பழங்காலத்தில் மன்னர்கள் கொடுங்கோலர்களாக மாறாதவாறு, புலவர்கள் அறிவுரை தடுத்துக் காப்பாற்றியது போல் அந்தப் புலவர்கள் போற்றிய அறம் பற்றிய நம்பிக்கையும் திருக்குறள் முதலான அறநூல்களின் கருத்துக்களும் கற்றவர் கல்லாதவர் எல்லாரிடையிலும் பரவி, மக்களிடையே கொடியவர்கள் தோன்றாதவாறு காத்துவருகின்றன. அதனால்தான் இந்தியநாட்டில் தமிழர் நலம் பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருந்தும் தமிழர் பொறுமை பூண்டு அமைதியாக இருக்கமுடிகின்றது.

இந்தப் பொறுமையைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ளலாகாது. தமிழ்நாட்டுச் செய்தித்தாள்கள் தங்கள் கடமையை நன்கு உணர்ந்து செயலாற்றவேண்டும்.

இந்தப் பெரிய செய்தித்தாள்கள் அவ்வப்போது மக்களின் தேவைகளை உள்ளவாறு உணர்த்தத் தவறிய காரணத்தால் தமிழ்நாடும் சட்டசபைக்கும் சென்றுள்ளவர்களும் இந்தச் செய்தித்தாள்களின் போக்கையே பின்பற்றுகிறார்கள். மேலிடத்தார்க்கு நல்ல பிள்ளைகளாக நடக்கவேண்டும் என்று நம்பி, உங்கள் கோரிக்கைகளை வெளியிடாமல், வாய் திறவாமல், கைதூக்கிப் பொம்மைகளாக இருந்துவருகிறார்கள். மக்களின் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மறைத்திடும் செய்தித்தாள்களுக்குத் தமிழ்நாட்டில் பெருமதிப்பு இருந்து வரும்போது நாமும் அவ்வாறே செய்து பெருமதிப்போடு வாழலாம் என்று கனவு காண்கிறார்கள். நீங்கள் தமிழ்ப்பெருமக்கள், இந்தக் கனவுகாணும் பிரதிநிதிகளையும் மேலிடத்தாரையும் விழிக்கச் செய்யவேண்டும். என்ன துரோகம் செய்தாலும் இந்த நாட்டில் மட்டும் வாழமுடியும் என்று நம்பிக்கையோடு இங்கே வளர்கின்ற செய்தித்தாள்களுக்கும் நீங்கள் மரக்கட்டைகள் அல்ல என்பதை உணர்த்த வேண்டும்.

தமிழ் மக்களாகிய உங்கள் தேவைகளைப் புறக்கணிக்கும் செய்தித்தாள்களைத் தொடாதீர்கள்.

கூறலாம். வங்காள நாட்டுச் செய்தித்தாள் வங்காள மக்களுக்காகத் தொண்டு செய்யும் அளவிற்குத் தமிழ்நாட்டுப் பெரிய செய்தித்தாள்கள் தொண்டு ஆற்றுவதில்லை. மராத்தி நாட்டுச் செய்தித்தாளோ, ஆந்திர நாட்டுச் செய்தித்தாளோ அந்தந்த மாகாணங்களுக்காக-அந்தந்த மக்களுக்காக உதவி செய்யும் அளவிற்குத் தமிழ்நாட்டுப் பெரிய செய்தித்தாள்கள் உதவுவதில்லை. வங்காள மக்களுக்கு ஏதேனும் தேவை என்றால், அந்த மாகாணத்தில் செய்தித்தாள்கள் அதை இருட்டடிப்புச் செய்யாமல், நன்றாக வெளியிட்டு மேலிடத்தார்க்கு எட்டுமாறு செய்கின்றன. அவ்வாறே மற்ற மாகாணத்து மக்களின் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் அங்கங்கே நடக்கும் செய்தித்தாள்கள் வெளியிட்டுப் பயன் விளையச் செய்கின்றன. ஆனால், தமிழ்நாட்டில் பெரிய அளவில் விற்பனையாகும் செய்தித்தாள்கள், தமிழ்நாட்டின் தேவைகளை இருட்டடிப்புச் செய்து மேலிடத்தார்க்கு நல்ல பிள்ளைகளாக நடிக்கின்றன. தமிழ்மக்களின் உணர்ச்சிகளும் கருத்துக்களும் மேலிடத்தார்க்குத் தெரியாதவாறு மறைத்து வெளிநாட்டில் தமக்குள்ள செல்வாக்கைப் பாதுகாத்துக் கொள்ள முனைகின்றன. இவை வாழ்வது தமிழ்நாட்டில்; வளர்வது தமிழர் பணத்தால். ஆனால் தமிழர்களின் உணர்ச்சிகளையும் தேவைகளையும் வெளியிட இவை கூசுகின்றன. இவ்வாறு தக்க வாய்ப்பு இல்லாதிருந்தும், தமிழரின் மனம் கெட்டுப்போகவில்லை; சதிக் கூட்டங்களும் கொடுஞ்செயல்களும் தமிழ்நாட்டில் தலையெடுக்கவில்லை. இழந்தவை பல.

தமிழ்மொழி தமிழ் நாட்டில் கட்டாய மொழி ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இவை போன்ற துறைகளில் மக்களின் உணர்ச்சிகளும் கருத்துக்களும் மேலிடத்தார்க்கு எட்டாதவாறு செய்த தொண்டு இந்த நாட்டுச் செய்தித்தாள்களையே சாரும். கிளர்ச்சியும், எதிர்ப்பும், பூசலும், ஆரவாரமும், கசப்பும், உட்பகையும் இன்று தமிழ்நாட்டில் உள்ளன என்றால் காரணம் என்ன? இந்தப் பெரிய செய்தித்தாள்கள் செய்துவந்த இருட்டடிப்பே காரணம் எனலாம்.

மக்களின் தேவைகளை நெடுங்காலம் மறைக்க முடியாது; நெடுங்காலம் புறக்கணிக்க முடியாது; தமிழ் மக்கள் ஆந்திரர்களைப்போல், மராத்தியர்களைப்போல், மற்றவர்களைப்போல் கொடுஞ்செயல்களில் இறங்கமாட்டார்கள்; மனம் வளர்ந்துவிட்ட மக்கள் ஆகையால், உடல் வலிமை பற்றிய முரட்டுச் செயல்களில் இவர்கள் ஈடுபட முடியாது.

ஆனால், இத்தன்மை பற்றித் தமிழர்கள் கோழைகள் என்றோ, எது செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் மரக்கட்டைகள் என்றோ இந்தச் செய்தித்தாள்கள் எண்ணிவிடலாகாது. இவற்றை நம்பி வாழும் மேலிடத்தாரும் அவ்வாறு எண்ணிவிடலாகாது.

ஆகையால் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்; உங்களை இந்தச் செய்தித்தாள்கள் மரக்கட்டைகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றன, மேலிடத்தாரும் இவற்றை நம்பி மயங்கி அவ்வாறு எண்ணுவதாகத் தெரிகிறது. உங்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்திற்கும் உங்கள் கைக்காசு அவற்றின் முதலாளிகளுக்குப் போகாதவாறு காத்துக்கொள்ளுங்கள்.

நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் என்று விற்பனையாகும் செய்தித்தாள்களை நாலாயிரம் ஐயாயிரம் என்ற அளவிற்குக் குறைத்துவிட உங்களால் முடியும். நீங்கள் கொஞ்சம் கடமையுணர்ச்சியோடு, உங்கள் நாடுவாழவேண்டும் என்று மனம் வைத்து நடந்தால் இது முடியும்.

மக்களாட்சியில் உங்களுக்கு உள்ள பேராற்றல் இது. மன்னர்கள் சோறு வழங்கிப் படைதிரட்டிக் காத்தார்கள். அது முடியாட்சிக் காலம். மக்களாட்சியில் உள்ள பெரும் படையாகிய இந்தச் செய்தித்தாள்களை நீங்கள்தான் காசு வழங்கிக் காப்பாற்றுகின்றீர்கள். காசைக் கருத்துடன் செலவு செய்யுங்கள். இந்தப் படையும் கடமையுணர்ச்சியுடன் திருந்தும். பெரிய மாறுதல்களை இத்தகைய கடமையுணர்ச்சியால் செய்துவிட முடியும். நாற்பதினாயிரம் என்ற விற்பனையளவு நாலாயிரம் என்று குறைந்திடச் செய்யுங்கள். மறுநாளே இந்தச் செய்தித்தாள் முதலாளிகளின் மனம் மாறும்; தமிழ்மக்களின் நன்மை பற்றிய செய்திகளை இனி மறைக்கக் கூடாது என்ற புத்துணர்ச்சி வரும். எல்லைத்தகராறு, மொழிச் சிக்கல், மாகாணத் தொழில் வருவாய் முதலான எல்லாச் செய்திகளையும் அப்போது இதே செய்தித்தாள்கள் பெரிய எழுத்தில் வெளியிடத்தொடங்கும். அதற்காக நீங்கள் கருதவேண்டியவை போர்க்களமும் பெரும் புரட்சியும் அல்ல; உங்கள் கையுக் காசும்தான்.

ஈழநாட்டில் ஈராறுநாட்கள்

அந்தப் பதுளைக் கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார்களும் வந்திருந்தனர். ஒரு தமிழாசிரியர் தலைமை வகித்தார். பண்டைத் தமிழகம் பற்றியும் இலக்கியம் பற்றியும் அங்கே பேசினேன். வந்திருந்த தோழர்கள் மிக உணர்ச்சியோடு கேட்டார்கள். பண்டைத் தமிழகத்தைப் பற்றியும் தமிழ் இலக்கிய வளம் பற்றியும் மாற்றி மாற்றிப் பேசுவதல்லது நவீன உலகத்தில் நமது முன்னேற்றம் என்பதுபற்றிப் பேச நமக்கு ஒரு வழியும் இல்லையே! இதையும் பேச்சோடு பேச்சாக அங்கே குறிப்பிட்டபோது, கூட்டம் பெருத்த ஆரவாரம் செய்தது. கூட்டம் முடிந்ததும் அந்த மலையிலேயே வேறொரு பகுதியிலுள்ள சிறு கிராமத்துக்குச்சென்றோம். அப்போது இரவு மணி பதினொன்று. அங்கேயும் ஒரு பெருங்கூட்டம் 'பெட்ரோ மாக்ஸ்' விளக்கோடு காத்திருந்தது. அந்தக் கூட்டத்திலும் பேசிவிட்டு இரவு ஒரு மணிக்குத் திரும்பினோம் பதுளைக்கு. பதுளையில் தலைமை தாங்கிய தமிழாசிரியர் வீட்டில் தூங்கிவிட்டு அதிகாலையில் நான்கு மணிக்கு எழுந்து நடுக்கும் குளிரில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். அங்கேயெல்லாம் தோழர் ராசதுரையும் கூட வந்து கொண்டிருந்தார். வளைந்து வளைந்து செல்லும் அந்தப் பயங்கரமான மலைப்பாதையில் கார் ஓட்டி வந்த தோழர் சின்னத் தம்பியின் லாவகமான ஓட்டம் உடற்களைப்பை மறக்க வைத்தது.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்! பதுளைக்குப் போகும் வழியில் ஒரு நீர் வீழ்ச்சியின் அருகில் காரை நிறுத்தி இறங்கிக் கால் முகம் கழுவினோம். கழுவிவிட்டுச் சிறிது நேரம் ஒரு புற்றரையில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்தோம். தோழர் சின்னத்தம்பி காருக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். ஊற்றி முடித்ததும், திரும்பவும் காரில் ஏறிப் புறப்பட்டோம். சிறிது தூரம் போனதும் எனது வலது கால் வலிக்க ஆரம்பித்தது. ஏதோ கடிப்பது போல் இருந்தது. ஒன்றுமிருக்காது என்று அசட்டையாய் இருந்துவிட்டேன். வலி அதிகரிக்க ஆரம்பித்ததும் காலைப்பார்த்தேன். பெரு விரலுக்கும் மறு விரலுக்கும் இடையில் இரண்டு அட்டைகள் கடித்துக் கொண்டிருந்தன. மெதுவாக அவற்றை எடுக்க முயற்சித்தேன். முடியவில்லை. நண்பர் ராசதுரை திடீரென்று ஒரு சிகரெட்டைக் கிழித்துப் புகையிலையைக் கொடுத்தார். அந்தப் புகையிலையை அட்டையின் மீது வைத்ததுதான் தாமதம், இரண்டும் சுருண்டு விழுந்தன. "கொஞ்ச நேரத்திற்குள் இரண்டு அட்டைகள் ஏறிவிட்டனவே" என்றேன் நண்பரைப் பார்த்து. "இதென்ன இங்கே தோட்ட வேலை பார்க்கும் தமிழர்கள் தினசரி இது மாதிரித் தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். வேலை முடிந்து வீட்டிற்குச் செல்லும்போது ஒவ்வொருவர் உடம்பிலும் சராசரி ஐம்பது அட்டைகளுக்குக் குறையாமல் இருக்கும். வீட்டிற்குப் போனதும் சுண்ணாம்புத் தண்ணீரால் அட்டைகளைத்துடைத்து எறிவார்கள்" என்றார் தோழர் சின்னத்தம்பி. என் நெஞ்சம் துணுக்குற்றது. இரண்டு அட்டைகள் கடித்ததால் ஏற்பட்ட வலியை என்னால் உணர முடிந்தது. 'ஐம்பது அட்டைகள் கடித்தால்......?' என்றால் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. அவர்கள் தமிழர்கள். கங்கை கொண்டு கடாரம் கொண்டு தெண்டிரை ஈழ மண்டலம் முழுதும் கொண்டொரு காலத்தில் கோலோச்சிய குடியினர்! கட்டை வெட்டிக் கலமாக்கி எட்டுத் திசையிலும் வாணிபம் நடத்திய பரம்பரையினர். அட்டை கடிக்க அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அல்லற் படுகிறார்கள் அந்த மலையிலே! சிரிப்பதா? அழுவதா? நிற்க.

காலை பதினொன்றரை மணிக்குக் கொழும்புக்கு வந்து சேர்ந்தோம். இயற்கை அழகும் செயற்கை அழகும் இரண்டறக் கலந்திருக்கும் அந்த நகரம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. நேரே, கடற்கரையை ஒட்டியிருக்கும் 'கிரீன் லாந்து' ஹோட்டலில் போய் இறங்கினோம். அது தமி

கண்ணதாசன்

ழர்கள் நடத்தும் விடுதி. தமிழகத்திலிருந்து வருவோரில் பெரும் பலர் அங்கேதான் இறங்குவது வழக்கமாம். நாங்கள் போன சமயத்தில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கண்டியில் கூடியிருந்தது. அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூட்டங்கள்

— 10-ம் பக்கம் —

உங்கள் உளம் மகிழ ஒரு செய்தி!

தெனாலிராமன் கதை உங்களுக்குத் தெரிந்ததுதான்!

ஆனால், வேடிக்கைக் கதைகள் சொல்லி, விந்தைச் செயல்கள் புரிந்த விகடகவி, சதிகாரர்களின் சாகசத் திட்டங்களால் சரிய விருந்த சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்கும் அரசியல் மேதையாக விளங்கினான் என்பது உங்களில் அனேகருக்குத் தெரிந்திராது!

தென்னகத்தின் பொன்கால வரலாற்றிலே புதையுண்டு கிடக்கும் அந்த அதிசயத்தை விவரிப்பதுதான்

விக்ரம் புரொடக்ஷன்ஸ்

தெனாலிராமன்

-தமிழ...

"வேலினும், வாளினும் வன்மை படைத்தவை ஏடும், எழுத்தாணியும்" என எக்காளமிட்ட கவிஞனாகத் தோன்றுகிறார் சிவாஜி கணேசன். உங்களுக்குப் பிடித்த நடிகரான அவருக்குப் பிடித்த வேடம் எனவே நடிப்பு அற்புதமாக அமைந்திருக்கிறது

சதிகாரர்களின் சதுரங்கக் காயாகி, சமரால் முடியாததை சரசத்தாலும், சாகசத்தாலும் சாதிக்க முயலும் நாட்டிய நளினியாக பானுமதி.

அரசியல் பகடையாடும் ஆச்சாரியராக நம்பியார்.

ராஜகம்பீர கிருஷ்ணதேவராயராக N.T. ராமாராவ்.

மற்றும் நாகையா, ஜமுனா, சுரபி பாலசரஸ்வதி, சந்த்யா ஆகியோர் அவர்களுக்கு ஏற்ற பாகங்களில்.

தென்றலின் இனிமை தவழும் தேமதுரத் தமிழ் வசனம் கவிஞர் கண்ணதாசன் எழுதியது

டைரக்ஷன் • B.S. ரெங்கா

பிப்ரவரி 3உ தென்னாடெங்கும் வெளியீடு.....

GOLDEN FILMS LTD. MADRAS 17.

பூரண உரிமையாளர்கள்:
கோல்டன் பிலிம்ஸ் லிமிடெட்.
2, விஜயராகவாச்சாரி ரோடு, சென்னை-17.

பனிமண்டலத்துப் பாரதிதாசன்

ப. புகழேந்தி

‘புஷ்கின் புகழ்பெற்ற கவிஞன்-புரட்சிக் கவிஞன்’ என்றுதான் தமிழ் மக்களில் படித்தவர்கள் அறிவர். ஆனால் புஷ்கின் புகழ் பரவியது எங்ஙனம் என்பதை அறிந்தோர் மிகச் சிலரே.

இங்கே புஷ்கினின் புகழ் முத்துக்களை ஆராய்கிறார் தோழர் ப. புகழேந்தி. இவர் நெல்லை மாவட்டத்தில் இயக்கம் வளர்க்கும் அடலேறுகளில் முன்னணியில் நிற்பவர். பண்பட்ட எழுத்தாளர். அன்னவரின் கவிதை விமர்சனத்திற்கு இந்தக் கட்டுரை சான்று சொல்கிறது.

உடையிலே பகட்டு. நடையிலே பெருமிதம். வாயசைக்கும் முன்னே உடலசைத்துத் தேவையைப் பூர்த்திசெய்யத் துடித்து நிற்கும் ஏராளமான எடுபிடி ஆட்கள். உய்யான வனத்தை உள்ளடக்கிய உல்லாச மாளிகை. அதில் உயர்ந்த வசதிகள் வானத்து சொர்க்கத்தை வையத்து விளிம்பிலே கொணர்ந்து கொட்ட வகையான ஏற்பாடுகள். எல்லாம் சேர்ந்த எழில்வாழ்வுக்குச் சொந்தக்காரன் அந்தச் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை. மாலையிலே குதிரைச் சவாரி மலைப்பு ஏற்பட்டால் மதுக்கிண்ணங்களின் துணை. இவற்றிலே தன்னை இணைத்திருந்தான் அவன். இந்தப் பெருவாழ்வு நெடுநாள் நீடிக்கவில்லை. திடீரென ஒரு பேரிடி. ஏராளமான கடனை வைத்துவிட்டு இறந்துவிட்டான் அவனது தந்தை. திகைப்பின் எல்லையில் நின்று திண்டாடித் தவித்தான் அவன். இன்னொரு மரணச் செய்தி. ஆனால் இது அதைப்போல நட்டத்தைத் தரவில்லை. பதிலாக சீமான் பட்டத்தைத் திரும்பவும் அவனுக்குச் சூட்டிவிடுகிறது. கிராமத்திலிருந்த அவனது மாமன் இறக்கும்பொழுது தன் ஏராளமான சொத்துக்களை இவன் பெயருக்கு ‘உயில்’ எழுதி வைத்து விட்டுக் கண்ணை மூடிவிட்டான். இழந்த உயிரைத் திரும்பப் பெற்ற ‘சத்தியவானா’க முன்னைய கடன்களை அடைத்துவிட்டு முழு மனிதனாக-பெரும் பிரபுவாக அவன் பவனி வருகிறான். மாமனின் கிராமத்திற்குச் சென்று சொத்தை ஏற்று நிர்வகித்து வருகிறான். தலைநகரில் வாழ்ந்த ‘டாம்பீக’ வாழ்வுக்கு ஏற்றதாக கிராமம் அமையவில்லை. செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் இயந்திரத் தன்மையான - சோம்பேறித்தனமுடைய வாழ்விலேயே நாட்களை ஓட்டுகிறான். இந்த நிலையில் இவனுக்குப் புதிய நண்பனொருவன் அறிமுகமாகிறான். அவன் சிறந்த அறிஞன். தத்துவம், இலக்கியம் இவற்றிலேயே தன்னை மிதக்கவிட்டிருப்பவன். வையத்து எழிற்கூட்டான, வயல் வெளிகளும் வளமை மிக்க பகுதிகள் பலவும் இயற்கையின் இருப்பிடமுமான கிராம வாழ்வின் இன்பங்களை அவன் இவனுக்கு விளக்குகிறான். அங்கேயுள்ள ஒரு குடும்பத்திற்கு இவனை அழைத்துச் சென்று நட்பினனாக்குகிறான். அது ஒரு மத்தியதரக் குடும்பம். குடும்பத்தலைவருக்கு இரண்டு பெண்கள். இளையவள் நண்பனின் காதலி. மூத்தவள் பேரழகி. இவன்மீது காதல்கொள்கிறாள் அவள். உரமும் பயிருமென, உடலும் உயிருமென இருவரும் வாழலாம் எனக் கனவு காண்கிறாள் அவள். காதல் வழக்கிற்கு மாறாகத் தானாகவே அவனுக்குத் தனது எண்ணங்களை எழுதுகிறாள். உல்லாசம் தவிர வேறொன்றும் தெரியாத இவனால் உண்மைக் காதலை உணரமுடியவில்லை. எண்ணத்தைச் செயலாற்றும் விருப்பமும் ஆற்றலும் அவனிடம் இருந்ததில்லை. அவளுக்கு எழுதினான் ‘என்னால் உனது கருத்தை ஏற்க முடியவில்லை. நான் இன்பவாழ்வு வாழும் எண்ணமுடையவனுமல்ல. திருமணம் ஒரு துன்பச்சூழல். துயரக்கதை. அதை நெருங்க நான் தயாராயில்லை. உன்னைக் காதலிப்பதை நான் நிறுத்திக்கொள்கிறேன். என்னை மறந்துவிடு...’ என்று. அவளோ இவன் நினைவாகவே இருக்கிறாள். தனது எண்ணத்தின் முதல்வனாக, இதயத்து அரசனாக அவனையே முடித்துவிட்ட அவளால் அவனை மறக்க முடியவில்லை. அவனது நினைவிலேயே காலத்தை ஓட்டுகிறாள்.

அன்று அவளுக்குப் பிறந்தநாள். நண்பன் இவனை அவள் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். இவனைக் கண்டதும் அவளது துயரவெள்ளம் பெருக்கெடுத்து அணைகடந்து அழுகையாக வெளிப்படுகிறது. அதனால் நண்பன்மீது ஆத்திரம் வருகிறது இவனுக்கு. வேண்டுமென்றே தன்னை இங்கே அழைத்துவந்து அவமானப் படுத்திவிட்டதாகத் தப்புக்கணக்குப் போட்டுவிட்ட அவன் அதற்குப் பதிலாக அங்கு நின்ற நண்பனின் காதலியைக் கட்டியணைக்கிறான். தன் காதலியைத் தவறாகக் கட்டியணைத்த இவனது செயல் நண்பனின் கோபத்தைக் கிளறிவிட்டுவிட்டது, இருவரும் துப்பாக்கி முனையில் சந்திக்கிறார்கள். நண்பன் சாவையே காதலியாக்கிக் கொள்கிறான். இவன் அவசியமில்லாமல் அவனைக் கொன்றுவிட்டதை எண்ணி வருந்துகிறான். மனம்உடைந்து அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு ஊர்ஊராகச் சுற்றித் திரிகிறான்.

பத்து ஆண்டுகளைக் காலம் விழுங்கிவிடுகிறது. தலைநகருக்கு வருகிறான் அவன். அங்கே ஆடம்பரமான விருந்தொன்று நடந்து கொண்டிருக்கிறது. பிரபுத்துவப் படோடோபத்தின் முழு உருவாகக் காட்சியளித்த அந்த விருந்தில் அவன் தன்னைக் காதலித்த அவளைக் காண்கிறான். அவள் பழைய கிராமத்தவளாக இல்லை. சாதாரணத் தோற்றத்தை அவள் பெற்றிருக்கவில்லை. வைரங்கள் கோர்த்த நகைகளையும் வானத்து வில்லையும் போட்டிக்கழைக்கும் வண்ணப் புடவைகளையும் அணிந்து நாகரிக நங்கையாக நடமாடும் பொன்வண்டாக அவள் காட்சியளிக்கிறாள். வாழ்வின் பெரும் பகுதியைக் கடந்துவிட்ட ஒரு பெரும் சீமானின் மனைவி அவள். மது அருந்தும் வழக்கம்கூடப் புதிதாக அவளைப் பிடித்துக்கொண்டிருந்தது. பேசும் மானை அவளைக் கண்டுபேச ஆசைப்படுகிறான் அவன். அவள்மீது அடக்கமுடியாத காதல். அவளும் அவனை அடையாளம் கண்டு கொள்கிறாள். ஆனால், அவனிடம் பேச அவள் விரும்பவில்லை. மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டுபோல அவன் அவளைச் சுற்றிக் கொண்டேயிருந்தான். அவளோ அவனைத் தனியே சந்திக்கும் வாய்ப்பைக் கூடிய மட்டும் குறைத்தே வந்தாள்.

இந்த நிலையில் தன் எண்ணங்களை எப்படியும் அவளிடம் தெரிவித்துவிட அவன் முடிவு செய்கிறான். தன் காதற் புருவான அவளுக்குக் கடிதம் ஒன்று எழுதிக் கையில் எடுத்துக்கொண்டு அவளைச் சந்திக்கிறான். அவன் தந்த கடிதத்தை அமைதியாகப் படித்துப் பார்த்த அவள் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றை வெளியிடுகிறாள். பிறகு பேசுகிறாள்: ‘நீ புகழ்ந்து பூரிக்கும் இந்த என் வாழ்வு, இதில் நான் பெருகிற வசதிகள், மானோடும் சோலையும் மயிலாடும் சாலையும் குளிர்புனல் கொட்டும் நீரூற்றும் நிறைந்த இந்த அரண்மனை இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, வெள்ளி, தங்கம் இவற்றினாலான பரிமாறும் பாத்திரங்களை விட்டுவிட்டு, ஒளிபட்டதும் மின்னலென ஒளிவிடும் இந்த உயர்ந்த ஆடை அணிகளையும் தவிர்த்துவிட்டு மண் பாண்டங்களில் பரிமாறுகிற, விரிப்பதற்குப் பாய் தவிர வேறு எதுவுமற்ற, வேளைக்குத் தேவையான உணவு சரியாகக் கிடைக்காத, மழைத்தண்ணீர் முழுவதும் உள்ளே ஒழுகுகிற கிராமத்துக் குடிசை வாழ்வுக்குத் திரும்ப நான் தயார். யாருக்காக? நான் அப்படி வாழ்ந்தபோது சந்தித்த அந்த என் காதலனுக்காக ஆனால் இன்றோ அது முடியாது. என் தெரியுமா? சீமான் ஒருவனின் சிந்தையில் குடியேறிவிட்டவள் நான். உலகக் கண்ணோட்டத்தில் நான் அவரது மனைவி. என் உடலின் எந்தப் பகுதியும் அவருக்கே உரிமையாக்கப்பட்டுவிட்டது. ஆனால் என் காதலா! எனது இதயத்தில் உன்னைத் தவிர வேறு எவருக்கும் இடமில்லை. இன்னும் உன் உருவத்தை அங்கிருந்து அழித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. என்றும் நான் சாகும்வரை என் கணவரை விட்டுக் கண்டிப்பாகப் பிரியப்போவதில்லை.இது நிச்சயம்...

அவனோ பெண்மையின் இந்த முரசு கேட்டுத் துடிக்கிறான். இதயத்தில் எதுவுமற்றவனாகத் தன் வழியே நடக்கிறான்.

அற்புதமான இந்த ‘இவ்ஜினி ஒனிஜின்’ கதையைக் காவிய வடிவில் அழகாகச் செய்தவன் புரட்சிக் கவிஞன் அலெக்ஸாண்டர் புஷ்கின். அவனது அந்தக் கதைத் தலைவி குமுறும் எரிமலையாகக், கொந்தளிக்கும் கடலாகக் கேட்கிறாள்; ‘கிராமத்தில் வறுமையே துணையாய் வாழ்ந்த என்னை நீங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்க விரும்பவில்லை. உங்களைக் காதலிப்பதாக நானே எழுதிய கடிதத்தைக்கூட நீங்கள் அலட்சியப்படுத்தினீர்கள். எனது காதலை நையாண்டி செய்தீர்கள். இன்று நான் பணத்தில் மிதக்கிறேன். படோடோபத்தில் காலம் கடத்துகிறேன். நாகரிகத்தின் உச்சியிலிருப்பதாக நடிக்கிறேன் எனவே நீங்கள் என்னைக் காதலிப்பதாகக் கூறுகிறீர்கள். ஏழையான என்னை அணைத்து முத்தமிடுவது அன்று உங்களுக்கு சித்தம் மாறியவனின் செயலாகத் தெரிந்தது. இன்றோ என் காலில் விழுந்து மன்றாடுகிறீர்கள் நான் பணம் படைத்தவள் என்பதற்காக அன்று கசந்த எனது காதல் இன்று இனிக்கத் தொடங்கிவிட்டது, என்னிடம் பணம் இருப்பதால்...! ’அப்படித்தானே?...... என்று. இதன்மூலம் உலகப்பெண்களின் பெரும்பாலோர் பெற்ற தோல்விப் படலத்தை மிகத் தெளிவாக உணர்த்தும் புஷ்கின் 1799-ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாள் பீட்டர் ஸ்பர்க் (தற்போது லெனின் கிராட்) கிலிருந்து தெற்கிலுள்ள மிகாய் லாவ்ஸ்கி என்ற கிராமத்தில் பிறந்தவன். ரஷ்ய இலக்கியத்தின் தந்தையான அவனது தந்தை மாஸ்கோ பிரபுக்கள் பரம்பரையைச் சேர்ந்தவன். தாயோ ஆப்ரிக்க நீக்ரோ ஒருவனின் பேத்தி. எல்லை மீறிய அகம்பாவமும், அலட்சியமும், அவசியமற்ற ஆடம்பரச் செலவும், அர்த்தமற்ற போக்கும் அமைந்த பிரெஞ்சு வாழ்க்கை முறை அக்கால ரஷ்யப் பிரபுக்களின் வாழ்வு முறை. அத்தகைய தாய் தந்தையரிடம் பெறமுடியாத பேரன்பைத் தன்னை வளர்த்த அரினா ரோடியோவ்னா விடம்தான் பெறமுடிந்தது புஷ்கினால்.

சிறுவயது முதலே அவன் தனது தந்தையின் நூல்நிலையத்திலுள்ள ஏராளமான பிரெஞ்சு நாவல்களையும் பிறவற்றையும் கற்றுத் தேர்ந்தான். அவையே அவனது இலக்கியப் பற்றை வளர்க்கப் பெரிதும் உதவின.

தனது பன்னிரண்டாம் வயதில் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த லைசி என்னும் உயர்ந்த பள்ளிக்கூடத்திற்குப் படிக்கச் சென்றான். அங்கே படித்த ஆறு ஆண்டுகளில் ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’ என்ற பிரெஞ்சுப் புரட்சியின் பொன்னான வார்த்தைகளின் பொருளைத் தெளிவாகப் புரிந்துகொண்டான்.

இந்த வேளையில் ரஷ்ய வரலாற்றில் முக்கிய சம்பவங்கள் சில நிகழ்ந்தன. ரஷ்ய மண்டலத்தைத் தன் கீழே கொண்டுவரும் எண்ணத்தோடு போர்தொடுத்தான் மாவீரன் நெப்போலியன். ஜார்மன்னன் நிக்கோலஸ் படைதிரட்டி எதிர்த்து வெற்றியும் பெற்றான். இந்தப் போர்க்காலத்தில் நாட்டுப் பற்று மிக்க வாலிபர்கள் பலர் ‘பீட்டர்ஸ்பர்க் நலனைக் கவனிப்போர் ‘சங்கம்’ எனும் அமைப்பைத் தொடங்கிய பொழுது புஷ்கினும் தீவிரப் புரட்சிவாதியாக மாறிக் கொண்டிருந்தான்.

—அடுத்த இதழில் முடியும்—

நன்றியுரை

நாளது 22-1-56 ஞாயிறன்று மாலை தூத்துக்குடி திரு. வி. க. மன்றத்தின் சார்பில் நடைபெற்ற திரு. வி. க. நினைவு விழாவில் நான் கலந்து கொண்டபோது, ஊர்தி நிலையத்தில் வந்து வரவேற்றும், பொதுக் கூட்டத்தில் வரவேற்பிதழ் அளித்தும் மாலையிட்டும் கைத்தறி ஆடைகளிட்டும் திரு. வி. க. மன்றம், நகர தி. மு. கழகம், மஜீத் மன்றம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், வடக்கூர் தி. மு. கழகம், பன்னீர் செல்வம் கழகம், வ. உ. சி. கழகம், மேல சண்முகபுரம் தி. மு. கழகம், மேலூர் தி. மு. கழகம் ஆகிய பல்வேறு கிளைக் கழகங்கள், மன்றங்கள் சார்பில் என்னிடம அன்பார்வத்துடன் அளவளாவி என்னைப் பெருமைப் படுத்திய தோழர்களுக்கும் கழக மன்றச் செயலாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; தலைமை வகித்த பேராசிரியருக்கும் என் நன்றி உரித்தாகுக.

கா. அப்பாத்துரை

முதலாளி கறுப்புக் கண்ணுடியை எடுத்துப் பழையபடியும் மாட்டிக் கொண்டார். வனஜாவின் திகைப்பு திகைப்பாகவே நின்றது. "ஏன் திகைக்கிருய்" என்று அவளை அணைத்தபடியே கேட்டார் முதலாளி. "ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டு தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்ட வனஜா, சிரித்துக் கொண்டே அவர் மடியில் சாய்ந்துவிட்டாள். காலையில்,வனஜா முன்னுலேயே எழுந்து முதலாளிக்குக் 'காபி' எடுத்து வந்து கொடுத்தாள். அந்த நேரத்தில் வனஜாவை அழைத்தபடியே அம்பிகாவும் அங்கே வந்துவிட்டாள். அவளை முதலாளிக்கு அறிமுகப்படுத்திய வனஜா, அவளுக்கும் ஒரு சந்தர்ப்பம் கேட்டு வைத்தாள். "நீ சொன்னுல் நான் மறுக்கவா போகிறேன்?" என்று சாவியை அவளிடம் கொடுத்து வைத்தார் முதலாளி. சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்ட முதலாளி அம்பிகாவின் முன்னிலையிலேயே வனஜாவின்மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்திக் கொண்டு வெளியேறினுர்.

அன்று மாலை உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்த அம்பிகாவின்முன் வக்கீல் தண்டபாணியின் குமாஸ்தா தோன்றினுர். "நாளை மறுநாள் விசாரணை ஆரம்பம்" என்று சட்டபூர்வமாகச் சொல்லி வைத்தார். "சரி! பாலன் வந்துவிடுவார்" என்று கூறி, அவரை அனுப்பினுள் அம்பிகா. "நாளை மறுநாள் விசாரணை! நமக்கென்ன வந்தது? சீச்சீ! அப்படி விட்டுவிடலாமா? உம்! நம்மை அவர் விட்டுவிடவில்லையா? நாம் போகாமல் இருந்தால் தண்டிக்கப்பட்டு விடுவாரே! அவர் தண்டிக்கப்பட்டால் இந்திரா கண்ணீர் வடிப்பாளே! உம்! நம் கண்ணீரை யார் கவனித்தார்கள்? ஊரார் கண்ணீரைத் துடைக்கப் போகும் ஒவ்வொருவரும் கடைசியில் தாங்களே கண்ணீர் வடிக்கும் நிலைமைக்கு வந்து விடுகிருர்கள். நாம் பேசாது இருந்துவிடுவோம்! அவர் இங்குதானே வந்தாக வேண்டும்!"- என்றெல்லாம் சிக்குப்போட்டு சிக்கறுத்துக் குழம்பிய அம்பிகா, பாலன் தன்னைத் தேடிவந்தால்தான் தான் போவது, என்ற முடிவுக்கு வந்தாள்.

10

வழக்குரைத்த படலம்

"இ. பி. கோ. இத்தனுவது செக்ஷன்படி எதிரியின்மீது குற்றம் சாட்டப்படுகிறது."

—நீதிமன்ற வழக்கம்.

மேலைச்சிவபுரியில், பாலன், காதல் உலகிலே களித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் வழக்குக்கு 'ஆஜ'ராகுமாறு ஒரு உத்தரவு அவன் கைக்குக் கிடைத்தது. இந்திராவிற்குக் கவலை மேலிட்டது. "மீண்டும் கணவனைப் பிரியவேண்டுமே" என்று துடித்தாள். பாலன் அவளுக்கு ஆறுதல் கூறிப் புறப்படத் தயாராஞன். ஆனுல், அவன் தந்தை அவனைத் தனியே அனுப்புவதாக இல்லை. "கூட இந்திராவையும் சுந்தரத்தையும் கூட்டிக்கொண்டு போ" என்று கூறினுர். பாலன் மகிழ்ச்சியோடு சம்மதித்து இந்திராவையும் சுந்தரத்தையும் கூட்டிக்கொண்டு சென்னைக்குப் பயணம் ஆனுன். சென்னையில் மூவரும் ஒரு ஹோட்டலிலே தங்கினுர்கள். நீதிமன்றத்திற்கு பாலனும் சுந்தரமும் புறப்படும்போது இந்திரா தானும் வரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள்.

"நீ வேண்டாம். நிம்மதியாக இங்கே ஓய்வெடுத்துக்கொள். ஒரு மணிக்கெல்லாம் நாங்கள் திரும்பிவிடுவோம்" என்று கூறி அவளை இருக்கச் செய்துவிட்டு பாலன் சுந்தரத்தோடு புறப்பட்டான். நீதிமன்றத்தில் பிராசிக்யூஷன் தரப்பில் வழக்குத் துவங்கியது. அம்பிகாவின் தாய் கடுகடுத்த முகத்தோடு வந்து உட்கார்ந்திருந்தாள். பூர்வாங்க வாதம் முடிந்தது. பிராசிக்யூஷன் தரப்பு முதல் சாட்சியாக அம்பிகாவைப் போட்டிருந்தார்

14

கள். அவளை மறுநாள் காலை பதினேரு மணிக்கு விசாரிப்பது என்று முடிவு செய்து கோர்ட் கலைந்தது.

சுந்தரமும் பாலனும் ரூமிற்கு வந்து சேர்ந்தனர். அங்கே இந்திரா படுத்தபடியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். பாலன் வந்ததும் "தீர்ப்பு எப்படி ஆச்சு?" என்று அவசரம் அவசரமாகக் கேட்டாள். அன்றைக்கே தீர்ப்புச் சொல்லிவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தாள் அந்தப் பேதை! அவ்வளவு சுலபமாகவா வழக்கு முடிந்துவிடும்? அதுவும் நமது நீதிமன்றங்களில்! வாலிப நீதிபதி வழக்கை விசாரிக்க அவரே வயோதிக நீதிபதியாக ஆனபின்தானே வழக்கு முடிவடையும்! பாலன் சிரித்துக் கொண்டே, "நாளைக்கு மீண்டும் விசாரணை" என்ருன். "இது இப்படியே எவ்வளவு நாள் நடக்கும்" என்று கேட்டாள் இந்திரா. "குறைந்தது ஆறு மாதமாவது நடக்கும்" என்று சாதாரணமாகப் பதில் சொன்னுன் பாலன். "அப்படி என்ருல் எதற்காக ஹோட்டலில் தங்க வேண்டும்? ஒரு வீடு எடுத்துக் கொண்டு விடலாமே!" என்ருள் இந்திரா. சுந்தரம் ஆமாம் போட்டான். பாலன் இணங்கினுன். மறுநாள் விசாரணை முடிந்ததும் வீடு தேடுவது என்று முடிவு செய்தார்கள். இந்திரா குளிக்கும் அறைக்குள் சென்ருள். கதவைச் சாத்திக்கொண்டாள். அப்போது சுந்தரம் மெதுவாக பாலனிடம் "நாளைக்கு அம்பிகா உனக்கு ஆதரவாகச் சாட்சியும் சொல்வாளா?" என்று கேட்டான். "சொல்வாள் என்றுதான் நினைக்கிறேன்" என்று சுவையில்லாமல் பதில் சொன்னுன் பாலன். "ஏன், அவள் இன்றைக்கு நீதிமன்றத்திற்கு வரவில்லை" என்று சுந்தரம் கேட்டதற்கு பாலன் பதில் சொல்லவில்லை. அவன் இதயத்தில், அவன் அம்பிகாவிற்கு எழுதிய கடிதம் குத்திக்கொண்டிருந்தது. "அந்தக் கடிதத்தைப் படித்து அம்பிகா வருந்தி, வழக்கில் அக்கரை காட்டாமலோ, எதிர்மாருகவோ போய்விட்டால் என்ன

செய்வது" என்னும் பய
அவன் மனதில் சூழ்ந்த
"அடடா! எவ்வளவு மு
யோசனை இல்லாமற் செய்
விட்டோம்!" என்று எண்
மிட்டபடி இருந்தான் பால
அதைச் சுந்தரத்திடம் மெ
வாகச் சொல்லவும் செய்தா
குளிக்கும் அறைக்குள் இரு
இந்திராவிற்கு இதெல்லா
கேட்டது. சுந்தரம் பாலனி
"வா, போய் அம்பிகாவை
பார்த்து விட்டு வந்துவி
வோம்" என்ருன். இந்திர
வெளியில் வந்தாள். "நாங்க
போய் வருகிருேம். நீ பத்தி
மாக இரு" என்ருன் பால
"இல்லை, நானும் வருகிறேன்
என்று புறப்பட்டாள் அவ
பாலன் எவ்வளவு மறுத்து
பயன் இல்லாமற் போயிற்
பிறகு அவளையும் அழைத்து
கொண்டு வனஜாவின் வீட்டிற்
வந்தார்கள். அப்போது அங்
வனஜாவும் கினஜாவும் இல்
அம்பிகா மட்டும் இருந்தா
பாலன் வருவதைப் பார்த்
எழுந்து ஓடி வந்தாள். எ
லோரையும் வரவேற்ருள். கா
கொண்டு வந்து கொடுத்தா
இந்திராவோடு பேசவே அ
ளுக்குச் சங்கடமாக இருந்த
பாலனிடம் எதைப் பேசுவ
என்று தெரியாமல் திண்டா
ளுள். அப்போதிருந்த சூழ்நி
யில் இருவரும் நல்லபடியாக
பேசிக்கொள்ள வேண்டுமெ
ருல் அம்பிகா ஒரு பெரிய மு
னுரை கொடுத்தாக வேண்டு
அந்த முன்னுரையில் இந்தி
இறந்துவிட்டதாகத் தா
சொல்லியதேன் என்று விளக்
யாக வேண்டும். இல்லையே
சுமுகமான மனநிலை ஏற்படா
அம்பிகா துணிந்து துவங்கினு
நடந்ததை எல்லாம் விபரமா
சொன்னுள். பாலன் அ
நம்பத் தயாராய் இல்
ஆனுலும் அந்த நேரத்தில் ந
பவன்போல் தலையசைத்
வைத்தான். இந்திராவி
இப்படி ஒரு நாடகம் நடந்
அப்போதுதான் தெரியும்.
தரம் அந்த நேரத்தில் "அம்பி
சிறந்த நடிகை" என்று
மானித்துக் கொண்டா

பாலன் நம்புவதாக இருந்தாலும் அவன் நம்பமாட்டான் போல் இருந்தது. ஆனால் யாரும் அதை வெளிப்படுத்தவில்லை. அம்பிகா பேச்சோடு பேச்சாகத் தான் நடிகையாகப் போகும் முடிவையும் சொல்லிவைத்தாள்.

"இனி எனக்கு வாழ்க்கையிலே என்ன இருக்கிறது?" அப்படியாவது சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகிறேன். கண்ணீர் வடித்துக் கண்ணீர் வடித்துக் கண்களும் வீங்கி விட்டன. சோக இருளிலேயே சுற்றிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், இப்படி ஒரு துணிகரமான முடிவுக்கு வருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாலு காசு கையில் இருந்தால்தான் எல்லோரும் மதிப்பார்கள். வலிய வரும் எதற்குமே அவ்வளவு மதிப்பு இருக்காது. நான் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டப்பட்டு விட்டேன். யாரும் எனக்காகத் துளி கண்ணீர் வடித்தார்களா? ஏன் வடிக்கப் போகிறார்கள்? என் துன்பங்களுக்கு 'மார்க்கெட்' இல்லை. சிலரது வாய், அனுதாபம் தெரிவிக்கிறது. கண்களைப் பார்த்தால்தான் இருதயம் புரிகிறது. உம்! எல்லாம் வேஷக்கார உலகம்!" என்று மந்திரிகளின் புத்திபோல எங்கேயோ போய் எங்கேயோ வந்து நின்றாள் அம்பிகா. சுந்தரமும் பாலனும் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். அம்பிகாவின் கண்களிலும் அவள் உட்கார்ந்திருந்த நிலையிலும் ஒரு தீர்மானம் தொனித்தது.

பாலன் மெதுவாக வழக்கைப் பற்றி ஆரம்பித்தான். சிரித்த அம்பிகா "அதிலெல்லாம் விட்டுக் கொடுக்க மாட்டேன்! நீங்கள் பயப்பட வேண்டாம்!" என்றாள். சுந்தரத்திற்கு வேறொரு ஆச்சரியம் பிறந்தது.

"அதிலெல்லாம் விட்டுக் கொடுக்க மாட்டாளாமே! பின் எதில் விட்டுக்கொடுத்து விட்டாள்? ஒருவேளை தன் இடத்தை இந்திராவிற்குக் கொடுத்துவிட்டாளோ"-அவன் மெல்லச் சிரித்தான். அம்பிகா அவர்களிடம், தானே காலையில் ஹோட்டலுக்கு வந்து கூட்டிக்கொண்டு போவதாகக் கூறி வழியனுப்பி வைத்தாள். அப்போது அவள் ஒரு மிடுக்கான பணக்காரியின் நிலையில் இருந்தாள்.

அவர்கள் போனதும் அம்பிகா கட்டிலில் வந்து சாய்ந்தாள். எதிர்பாராதவிதமாக அந்தப் படமுதலாளி அங்கு வந்து சேர்ந்தார். "வனஜா இல்லையா?" என்று கேட்டார். "இல்லை" என்றாள் அம்பிகா, பணிவோடு. "வெளியிற் போயிருக்கிறாள். இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவாள். உட்காருங்கள்" என்றாள். முதலாளி அமர்ந்தார். அமர்ந்தவர் திடீரென்று எழுந்தார். மாடிப்படிகளில் ஏறியபடி அம்பிகாவைக் கைகாட்டி அழைத்தார். அம்பிகா திடுக்கிட்டாள். ஆனாலும் மறுத்துரைக்க மாட்டாமல் அவர் பின்னாலேயே மாடிக்குச் சென்றாள். கட்டிலில் உட்கார்ந்த முதலாளி எதிர்த்தாற்போல் இருந்த நாற்காலியைக் காட்டி அதில் அம்பிகாவை அமரச் சொன்னார். அம்பிகா குழம்பிய படியே அமர்ந்தாள்.

'நான் ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டாயே!" என்று துவங்கினார் முதலாளி. 'கேளுங்கள்' என்று சொல்லவந்த அம்பிகா சந்தேகத்தில் வார்த்தை வராமல் விழுங்கினாள். "நான் தனி ஆள்" என்று ஆரம்பித்தார் முதலாளி. "யார் சொன்னது? வனஜா இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவாள்" என்று மனதில் நினைத்துக் கொண்டாள் அம்பிகா.

"நான் வனஜாவிடம் வருவது போவதெல்லாம் தற்காலிக மகிழ்ச்சிக்காகவே தவிர சேர்ந்து வாழ அல்ல. குடியாய்க் குடித்தனமாய் வாழக்கூடிய ஒரு மனைவி எனக்குத் தேவை. உன்னைப் பார்த்ததிலிருந்து நீ மிகவும் நல்லவள் என்பது எனக்குத் தெரிகிறது. ஜாதி மதத்தில் எனக்கு அக்கரை இல்லை. நான்... நான்... உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன்" என்று நிறுத்தினார். அம்பிகா திடுக்கிட்டாள். சிறிது கூட அவள் இதை எதிர்பார்த்தவளல்ல. "சற்று நேரத்திற்கு முன்தான் நடிகையாகித் தீர்வது என்று முழுத் தீர்மானம் போட்டிருந்தாள். திரும்ப அதை உடைக்க நினைக்கிறாரே இவர்! ஒருவேளை இப்படிப் பேசி நம்மையும் தற்காலிகமாக ஆக்க நினைக்கிறாரோ?" என்று எண்ணத் துவங்கிய அம்பிகா அவர் கருத்தை மறுத்துரைக்கும் பாணியில், "நான் அதற்குத் தகுதியுள்ளவளல்ல" என்றாள். "தகுதியை நானல்லவா தீர்மானிக்க வேண்டும்?" என்றார் முதலாளி.

"அம்பிகா! உண்மையைச் சொல்கிறேன். வாழ்க்கையில் நான் மிகவும் கஷ்டப்பட்டவன். படத்தொழிலுக்கு நான் வந்தது, பெண்ணாசையாலல்ல! சொன்னால் நம்பமாட்டாய் நீ! வனஜாவோடு நான் கொண்ட உறவை வைத்தே என்னைக் கணக்குப் போடுவாய். நான் வயோதிகனல்ல. வனஜாவைப் போன்ற ஓர் இளம்பெண் அருகிலே நின்று அழகு காட்டுவதும் குலுக்குவதுமாக இருந்தால் யாருக்குத்தான் ஆசை வராது? 'நான் தயார்' என்று சொல்வது போலவே அவள் அடிக்கடி நடந்து வந்தாள். வலிய வருவதை யார்தான் மறுப்பார்கள்? அதுவும் நீண்டநாள் தனியாக இருக்கும் என்னை ஆசைத்தீ சுலபத்தில் சூழ்ந்து கொண்டது. நான் தொட்டபோது அவள் மறுக்கவில்லை. என்னிடத்தில் உயிரையே வைத்திருப்பதாகப் பேசுகிறாள். எனக்குத் தெரியும் இப்படிப்பட்ட பெண்களின் குணம். இவளை நம்பி என் வைப்பாட்டியாகக் கூட வைத்துக் கொள்ள முடியாது. எனக்குத் தேவை குடும்பம் நடத்தக் கூடிய ஒருத்தி. லட்சக்கணக்கில் எனக்குச் சொத்து இருக்கிறது. நீ அதை ஆளத் தகுதியுள்ளவள்; முழுமனதோடு கேட்கிறேன், என்னை மணந்துகொள்கிறாயா?"—அம்பிகாவின் மனம் மாற ஆரம்பித்தது. சபலம் தட்டிற்று. ஆனாலும் "இவர் எப்படிப்பட்டவரோ" என்ற சந்தேகம் மட்டும் நின்று கொண்டிருந்தது. முதலாளி தன்னைப் பற்றியும் வெகுவாகச் சொல்லிக் கொண்டார். தன் கைப் பையிலிருந்து ஒரு வைர அட்டிகையை எடுத்தார். அதைக் கூர்ந்து கவனித்தாள் அம்பிகா. அவர் முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தாள். "அழகாகவும் இருக்கிறார்" என்று அவளுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அம்பிகா தலை குனிந்து கொண்டாள். அட்டிகையை அவள்முன் நீட்டினார் முதலாளி. அவள் வாங்காமல் இருந்தாள். மெதுவாக அவள் கழுத்தில் தன்கையாலேயே அணிந்துவிட்டார். அப்போதும் அவள் தடுக்கவில்லை. பையிலிருந்து பன்னிரண்டு வளையல்களை எடுத்தார். அணிவித்தார். அம்பிகா பேசாமல் இருந்தாள். பிறகு தோடு, மூக்குத்தி, புடவை அத்தனையும் கையோடு கொண்டு வந்திருந்தார். அம்பிகா துணிந்து இறங்கி விட்டாள். புடவையை உடுத்திக் கொண்டாள். தலைவாரிக் கொண்டு அவர் முன்னால் அலங்காரமாய் வந்து நின்றாள். முதலாளி சும்மா இருக்கவில்லை. அவளும் தடையொன்றும் கூறவில்லை. உடனேயே அவள் தான் அவரிடம் நடந்துகொள்ளும் முறைபற்றி வருந்தத் துவங்கினாள். "இப்படி ஏமாற்றிக் கைவிட்டு விட்டால்" என்று பயந்தாள். முதலாளி அதை அறிந்தார். "சரி, வா! இப்பொழுதே ரிஜிஸ்தரார் ஆபீசுக்குப் போய்த் திருமணம் செய்து கொள்ளலாம்" என்றார். அம்பிகா மகிழ்ச்சியோடு புறப்பட்டாள். இருவரும் ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்கள். முதற்சடங்குகள் முடிந்து கை எழுத்துப் போடவேண்டிய கட்டம் வந்தது. அம்பிகா கை எழுத்திட்டாள். முதலாளியும் கை எழுத்திட்டார். அம்பிகா கூர்ந்து கவனித்தாள் அந்தக் கை எழுத்தை.

சங்கரன்!

அவள் உயிர் நின்றுவிடும் போல் இருந்தது.

தொடரும்



ஆசிரியர் கண்ணதாசன் பம்பாய்க்குச் சொற்பொழிவாற்றச் சென்றபோது பம்பாய்த் தோழர்களுடன் எடுத்த புகைப்படம்.
இடமிருந்து வலம்: எஸ். தியாகராஜன், நெல்லைச்செழியன், ஆசிரியர் கண்ணதாசன், மி. சந்தானம், வடவை வின்சன்ட்.

எங்கள் தாய்வீட்டுச் சொத்து

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

மாமன் அடித்தானே
மல்லிகைப்பூச் செண்டாலே !
அத்தை அடித்தாளோ
அல்லிமலர்ச் செண்டாலே !

—"சும்மா வம்பு செய்வதற்காக அழுகிருயா? அல்லது அத்தை மாமன் யாராவது அடித்தார்களா?" என்று கேட்கிருள். அதுவும் எதால் அடித்தார்களாம் ! பூச்செண்டாலே ! கற்பனையில்கூட கம்பால் அடிக்க மறுக்கிருள் தாய். 'பெற்றமனம் பித்து' என்பார்கள்; பொய்யல்ல ! அப்படியே பூச்செண்டால் அடித்திருந்தாலும்—தாய்க்குக் கோபம் வருகிறது—"அடித்தாரைச் சொல்லு, நான் ஆக்கினைகள் செய்து வைக்கிறேன் ; தொட்டாரைச் சொல்லு, நான் தோள்விலங்கு போட்டு வைக்கிறேன் ; வெண்ணெயால் விலங்கு பண்ணி நான் வெய்யிலிலே போட்டு வைக்கிறேன் ; மண்ணுல் விலங்கு பண்ணித் தண்ணீரில் போட்டு வைக்கிறேன்" என்கிருள். தாய் இங்கே பாதுகாப்பு மந்திரியாகிருள். இதுமட்டுமா ? பிள்ளையைப் புகழும் பெற்றவளுக்குக் கொள்ளை கொள்ளையாய் வார்த்தைகள் வருகின்றன. அவ்வளவும் வளமான வார்த்தைகள். கேட்ட உடனேயே தாய் எதிரிலே நின்ருல் அவள் காலிலே விழுந்து "உலகைப் படைத்தவளே நீதான் தாயே" என்று உரத்த குரலில் சொல்லத் தோன்றுகிறது.

ஏனழுதான் என்னரியான்
ஏலம்பூ வாய்நோக !
கரும்புக் கழுதானே
கண்ணிட்ட மைகரைய !
சிலம்புக் கழுதானே
செங்கமல வாய்சிவக்க !

மண்ணிலொரு புன்னைமரம்
வருசமொரு பூப்பூக்கும்
வருந்திஒரு காய்காய்க்கும்
என்னரியான் புன்னைமரம்
இலையுதிரப் பிஞ்சுவிடும்

★

ஆரும் அடிக்கவில்லை
ஐவிரலும் தீண்டவில்லை
தானு அழுகின்ருன்
தம்பிதுணை வேணுமென்று !
அவனு அழுகின்ருன்
ஆத்தாள் மடிதேடி !

தெற்கே மழை பொழியத்
தென்புறமாய்க் காற்றடிக்க
தென்மதுரை மீனுள்
சேங்கைக்கே தண்ணீர்வர
சேங்கை மணலொதுக்கித்
தென்னைபுன்னைஉண்டுபண்ணி

தென்னை குலை நெருங்கி
செண்பகப்பூத் தான்மலர்ந்து
தென்னை வந்தும் வீசாதா
தென்காற் றடியாதா
செல்வமகன் கண்ணயர !

வடக்கே மழைபொழிய
வடபுறமாய்க் காற்றடிக்க
வாழ்மதுரை மீனுள்
வைகைக்கே தண்ணீர்வர
வைகை மணலொதுக்கி
வாழைபுன்னை உண்டுபண்ணி
வாழை குலைநெருங்கி
மல்லிகைப்பூத் தான்மலர்ந்து
வாழைவந்தும் வீசாதா
வளர்காற் றடியாதா
வாழும் மகன் கண்ணயர !

★

தெள்ளு தமிழ்வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக் கலிதீர்த்த
பெருமானும் நீதானே ?
மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம்போட்டுத்
தேன்பாய்ந்து நெல்விளையும்
செல்வமுள்ளார் புத்திரனே !
வெள்ளித்தேர் பூட்டி
மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்டமுள்ளார் புத்திரனே !
வாரிப் படியளக்கும்
மகிமையுள்ளார் புத்திரனே !
சேற்றிலொரு செங்கழுநீர்
திங்களொரு பூப்பூக்கும்
நூற்றிலொரு பூவெடுத்து
முடிப்பார் மகனுரோ !

மதுரை இருகாதம்
வாழ்மதுரை முக்காதம்
'ஐம்பத்தாறு தேசம்'
ஆளவந்த சீமானே !
'பாட்டனு ராண்ட
'பதினெட்டு ராச்சியமும்'
நாட்டமுட னுளவந்த
ராசகுல நாயகமோ !

★

முல்லைப்பூக் கட்டடமாம்
முகப்பெல்லாம் உத்திரமாம்
முகப்பைத் திறந்துவிட்டால்
முல்லைப்பூ வாசனையாம் !
முல்லைப்பூ வாசனையாம்
உங்கள் ஐயா மூத்தவர்கள்
யோசனையாம் !

ஆராயிரவர்க்கும் அறியவந்த
பார்ப்பார்க்கும்
காரியமுஞ் சொல்லிக்
கணக்குரைப்பார் பேரனே !

★

கற்பகத்தைத் தேடிக்
கனிந்து வரும்பொழுது
உன் அரிய அம்மான்மார்
என்னகொண்டு வந்தார்கள் ?

கொத்துவிடா நெத்தும்
கோதுபடா மாங்கனியும்
கோடைப் பலாச்சுளையும்
குலைசேர்ந்த மாங்கனியும்

பருவப் பலாச்சுளையும்
பக்குவத்து மாங்கனியும்
அக்கரையில் சர்க்கரையும்
அதிமதுரத் தென்னவட்டும்

காய்ச்சிய பாலும்
கற்கண்டும் செந்தேனும்
ஏலங் கிராம்பும்
இளங்கொடிக்கால் வெற்றிலையும்

சாதிக் களிப்பாக்கும்
சங்குவெள்ளைச் சுண்ணும்பும்
அத்தனையும் கொண்டுன்னை
அறியவந்தார் அம்மான்மார் !

கனிவருக்கம் கொண்டுன்னைக்
காணவந்தார் அம்மான்மார்
பழவருக்கம் கொண்டுன்னைப்
பார்க்கவந்தார் அம்மான்மார்!

★

ஆனைகட்டிப் போரடிக்கும்
அம்மானுர் சேனைதளம்
குதிரை கட்டிப் போரடிக்கும்
கோடிப்பேர் சேனைதளம்
மான்கட்டிப் போரடிக்கும்
மாமுடிமார் சேனைதளம்

அம்மானுர் செய்களிலே
அவலுக்கொரு நெல்லெடுத்துப்
பள்ளிதனைக் கூட்டிப்
பதம்போல் அவலிடித்து
இடைச்சிதனைக் கூட்டி
இலைபோல் அவலிடித்து
அவல் அழகைக் கண்டதம்பி-நீ
அழுகை அமர்ந்தாயோ ?

இதெல்லாம் பாண்டிநாட்டுத் தாயின் தாலாட்டு. இதுமட்டுமா ? பாண்டியநாட்டுப் பகுதியிலிருந்து தோழர் தமிழண்ணல் எடுத்துச் சேர்த்திருக்கும் பாடல்கள் ஏராளம், ஏராளம் ! அந்த அளவுக்கு ஈழநாடும் சோழநாடும் மற்றெல்லா நாடுகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன. மலையாளம், கன்னடம், ஆங்கிலம் அனைத்திலிருந்தும் தாலாட்டுக்கள் மூலமொழியிலும், மொழிபெயர்த்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதோடு ஏசுகிருஸ்து தாலாட்டு இருக்கிறது. நபிகள் நாயகம் தாலாட்டு இருக்கிறது. பெரியாழ்வார், குலசேகராழ்வார், குமரகுருபரர் நூற்களிலிருந்தும் தாலாட்டுக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு நின்றதா ? இக்காலக் கவிஞர்கள் பாரதிதாசன், கவிமணி, ராய. சொ., நாமக்கல் கவிஞர், வாணிதாசன், முடியரசன், அழகுவேலன், வே. அண்ணுமலை, கதி. சுந்தரம், தமிழண்ணல் முதலியோர் எழுதிய தாலாட்டுக்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு உண்மையைச் சொன்னுல் இந்த இக்காலக் கவிஞர்களின் தாலாட்டுக்களை இதில் சேர்த்தது தவறு. காரணம் தாய்மார்களின் தாலாட்டுக்களைப் படித்துவிட்டு, இந்தப் படித்தவர்களின் தாலாட்டுக்களைப் படிக்கும்போது மின்சாரக் குமிழ் விளக்குக்குப் பக்கத்தில் அகல்விளக்கைப் பார்ப்பதுபோல் இருக்கிறது. பாரதிதாசன் உட்பட இந்தக் கவிஞர்கள் தங்கள் தாய்மார்களிடம், தோற்ருர்கள் ! தோற்ருர்கள் ! தோற்றே போனுர்கள் ! ஆண்கள், தாங்களே பிள்ளைபெறும் காலம் வரும்வரை ஆண் கவிஞர்கள் தாலாட்டு எழுதக்கூடாது என்பது அடியேன் விண்ணப்பம். வயிற்றில் கிடக்கும் கரு கற்பனைக்கு உரு. ஆண்கள் வயிற்றில் கிடப்பது சோறு. அது உடம்புக்கு பலம் தரும். உணர்ச்சிக்கு வெறி ஏற்றும், உருகி ஓடும் இளகிய இதயத்தைக் குழந்தையோடு ஒட்டிக் குழந்தையை மெய்மறக்க வைக்கும் தன்மை ஆண்களின் தாலாட்டுக்கு வராது ! வராது ! தாயாகவே இருக்கவேண்டும். தனப்பால் கொடுக்கவேண்டும். மார்போடு சேர்த்தணைக்கும்போது மனிதசமுதாயமே மறந்துபோக வேண்டும். ஆம் ! அது நமது அன்னையருக்குத்தான் வரும். வந்திருக்கிறது வண்டி வண்டியாக இந்த நூலிலே. இது சாதாரண முயற்சி அல்ல. அரும் பெருஞ் செயல். எழுத்துருவில் இல்லாத தாலாட்டுக்களை எங்கெங்கிருந்தோ சேர்த்து ஒழுங்கான ஒரு-நூலாக வெளியிடுவது ஓய்வு நிறையக் கிடைத்தாலும் பல பேராலும் முடியாது. நண்பர் தமிழண்ணல் செய்திருக்கிருர். இத்தனைக்கும் இரண்டு ரூபாய் தான் இதன் விலை. அழகிய குழந்தை ஒன்று படுத்திருக்கும் காட்சி முகப்பை அலங்கரிக்கிறது. உயர்ந்த காகிதத்தில் வெளியிட்டிருக்கிருர்கள். 'தென்றல்' படிக்கும் ஒவ்வொரு வரிடத்திலும் இருக்கவேண்டிய நூல். மனதிற்குத் துன்பமும் சலிப்பும் ஏற்படும்போது இந்த நூலை விரித்து நான்கு பக்கம் படித்தால் துன்பம் அணுகாது. சலிப்புத் தளர்ந்துவிடும். பாசம் பெருகும். பற்று பற்றிக்கொள்ளும். குழந்தை இல்லாத குடும்பத்தார் நமக்கில்லையே ஒரு குழந்தை என்று ஏங்குவர். கர்ப்பிணியான மனைவியின் வயிற்றைப் பார்த்தே பாடுவான் கணவன். இளந் தம்பதிகள் தாங்களே குழந்தையாகித் தாலாட்டிக் கொள்வார்கள். குறைந்தபட்சம் அடுத்த வீட்டுக் குழந்தையையாவது அணைத்துக் கொள்ளச் சொல்லும் இந்தத் தாலாட்டைப் படித்தால். அவ்வளவு கற்பனைகள். அவ்வளவு எளிமை. வரிக்கு வரி உவமை. வார்த்தைச் சாலம் இல்லை. இருதயத்தின் அடித்தளத்திலிருந்து எண்ணங்கள் கொப்பளித்து வந்து ஒழுங்கு தவருமல் விழுகின்றன. அதிகம் சொல்வதேன் ? சிலப்பதிகாரத்திற்கு முன்னும் திருக்குறளுக்கு அடுத்தபடியும் நம் தாய்வீட்டுச் சொத்தாக இதை வைத்துப் பாதுகாக்க வேண்டும்.



வெளியிட்டோர் : செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 2-0-0.

இசை உலக மன்னனுக்கு அறிவுலக மன்னன் பாராட்டு!

தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்களது பெண் குழந்தைகள் அழகுராணி — மணிமேகலை ஆகியோருக்கு அண்ணா அவர்கள் தலைமையில் எழுத்தறிவிப்பு விழா 25-1-56 மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றபோது. நாதசுர இசை மன்னர் திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் தம் குழுவினருடன் இசை விருந்தளித்தார். அதுபோது அண்ணா அவர்கள் முடிவுரையாக ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

"நண்பர்களே, நம்முடைய இசைப் பெரும் புலவர் இராசரத்தினம் அவர்கள் நமக்கு இவ்வளவு நேரமும் நல்லதொரு நாதசுர இசை விருந்து அளித்துக்கொண்டிருந்ததை நாமெல்லாம் கேட்டு இன்புற்றோம்.

"தமிழ் நாட்டிலுள்ள பல செல்வங்கள் பறிபோய் விட்டாலும், இசைச் செல்வம் மட்டும் பறிபோகாமல் இருப்பது மட்டுமல்ல—இன்னும் நல்ல வளத்துடனும் இருந்து வருகிறது. அத்தகு இசைச் செல்வத்தை நமக்கெல்லாம் நல்ல வகையில் வழங்கும் இசைப் புலவர்கள் தமிழ் நாட்டில் பலர் இருந்தாலும் அவர்களிலெல்லாம் நம்முடைய இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் அவர்கள் தலைசிறந்து விளங்குபவர்.

"அவரது இசைப் புலமை பற்றித் தமிழ் நாட்டில் அறியாதார், இசையை அறியாதவர்களாகத்தான் இருக்க முடியுமே தவிர, இசையை ஓரளவேனும் உணர்ந்தவர்கள் இன்றையத்தினம் அவரது இசைப் பெருமையை நன்றாக அறிந்தவர்களாகவே இருக்கிறார்கள். பல காரியங்களைத் தக்க நேரத்தில் செய்யத் தவறிவிடும் இந்திய சர்க்காருக்கும்கூட, நமது இசைப்பெரும் புலவரின் இசைப் புலமையின் பெருமை எட்டிவிட்டதென்றால், உண்மையிலேயே, அவரது இசைப் புலமை அனைவராலும் நல்லபடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றுதான் பொருள்.

"அவரது இசைப் புலமை இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல—உலகில் உள்ள வேறு பல நாடுகளிலும்கூட எட்டிவிட்டது. மேல் நாடுகளில் இசைக்காக ஏற்பட்டிருக்கும் கருவிகளை அவர்கள் உபயோகப்படுத்தும் விதத்திற்கும், நமது நண்பர் இராசரத்தினம் அவர்கள் தமது இசைக்கருவியை உபயோகிக்கும் தன்மைக்கும் உள்ள மாறுபாடுகளை நன்றாக உணர்ந்திருப்பீர்களென நம்புகிறேன்.

"நாம் இங்கு கேட்ட இந்த இனிய ஓசையை—நாதத்தை மேல்நாட்டவர் கேட்கவேண்டுமானால், குறைந்தது 50 வாத்தியங்களை வைத்துக்கொண்டு, இசையையும் 50 துண்டுகளாக்கிக் கொண்டு, 50 பேர் பங்கிட்டுக் கொண்டு, ஒவ்வொருவரும் தக்க காலத்தில் ஒன்றாகச் சேர்ந்து இசை எழுப்புவார்கள்; அதைத்தான் நாம் கேட்க முடியும். ஆனால் இங்கு, ஒரே இசைக் கருவியைக்கொண்டே அதனை அனுபவிக்க முடியும். மேல்நாடுகளில் இசையை அனுபவிப்பதில் அவர்களுக்குள்ள பெருமையெல்லாம், இசைக் கருவிகள் எத்தனை அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ அத்தனை அளவிற்கு இசையில் இனிமை இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

'நமது நண்பர் இராசரத்தினம் அவர்களது நாயனத்தைத் தொலைவில் உள்ளவர்கள் கேட்க நேரிட்டால் அங்கு ஏதோ வீணை வாசிக்கப்படுகிறது என்றும், சில வேளைகளில் குழல் ஒலி எழும்புவதாகவும், இன்னுஞ் சில வேளைகளில், முழவொலி கிளம்புகிறது என்றும் சந்தேகப்படுவர். ஆனால், பக்கத்தில் வந்த பின்னர்தான், அதனைப் பார்த்ததும், இந்தச்]சாதாரணமான மரக்கட்டையில்] இவ்வளவு அருமையான இசை எப்படி எழும்ப முடிந்தது என்று நினைத்து ஆச்சரியப்படுவர்.

"அப்படிப்பட்ட சிறந்த தன்மையோடு, அத்தகு இனிமையை அளித்துவருவதற்கு, அவர் பல இடங்களிலும் கூறிவருவதுபோல், இசை மீது அவருக்குள்ள நீங்காப் பற்றும், அதற்காக அவர் அளித்துள்ள கடும் உழைப்பும், அவ்வுழைப்பின் பலனால் ஏற்படும் கற்பனைத் திறனும், அந்தக் கற்பனைத் திறனை உணர்ந்துள்ள தமிழ் மக்கள் அவர்மீது காட்டும் பேரன்பும்தான் அவரை இசைத்துறையில் வளப்படுத்தியதற்குக் காரணம்.

"இந்த விழாவில் கலந்துகொள்ள அவருக்கு ஏற்ற உடல்நிலை இல்லை என்று நான் கேள்விப்பட்டதும், உண்மையிலேயே நான் முதலில் வருத்தமுற்றேன். 'அவருக்கு உண்மையிலேயே உடல் நலமில்லை என்ற காரணத்தால்தான் சென்னையிலேயே தங்கி மருத்துவரிடம் சென்று மருத்துவம் பார்த்து வந்தார்கள்,' என்று தோழர் வேதாசலம் அவர்கள் மூலமாகக் கேள்விப்பட்டேன். அவருக்கு உடல்நிலை சரியில்லாத நேரத்தில் நான் சென்னைக்கு வந்தேன். அவரை நான் நேரிலேயே போய்ப் பார்க்க ஆசைப்பட்டேன். ஆனால், நான் அவரைப் போய்ப் பார்ப்பதற்குள்ளாக அவரே இங்கு வந்து இந்த அருமையான இசைவிருந்தளித்ததன் மூலம், அவரை நான் பாராமல் போனதற்காக அவர் எனக்குக் கொடுத்த தண்டனை என்ற வகையில்கூட நான் கருதலாம். ஆனாலும், பெருந்தன்மை படைத்தவர்கள் இப்படித்தான், ஒருவர் செய்ய மறந்துவிடும் காரியத்திற்குப் பரிசு தருவார்கள்—தண்டனை தரமாட்டார்கள்.

"அரசியல் அல்லலில் சதா காலமும் ஈடுபட்டுள்ள என்போன்றார்க்கு இத்தகு இசைவிருந்தை அளித்தமைக்கு அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"இந்தச் சிறந்த விழாவில், இந்த இசை விருந்தினால் நான் பெருமகிழ்வு கொள்வதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. தோழர் வேதாசலம் இல்லத்தில் நடைபெறும் இந்த ஏற்பாடு உண்மையிலேயே என் வீட்டில் நடைபெறும் ஏற்பாடுபோலத்தான். காஞ்சீபுரத்தில் இதுபோன்றதொரு விழாவை நடத்தும் வாய்ப்பு என் இல்லத்தில் இல்லை. என் இல்லத்திற்கு அவர் வந்திருந்து இதுபோன்ற இசை விருந்தினை, விழா ஒன்றில் நடத்தி உண்மையிலேயே என்னைப் பெருமைப்படுத்த வேண்டுமென விரும்புகிறேன். என்னுடைய மகன் திருமணத்திற்குத்தான் அவர் வர இருக்கிறார். சென்னையில் எனக்குள்ள வீடு என்று கருதப்படும் இந்த இல்லத்தில் இவ்விழா நடைபெறுவது, என் இல்லத்தில் நடைபெறுவதாகவே பெருமகிழ்வும், பூரிப்பும் கொள்கிறேன்.

"உண்மையிலேயே அவருக்குச் சிறந்த பரிசுகள் என்று அளிக்க வேண்டுமானால், சென்னையில் இந்திய சர்க்கார், பலருக்குப் பட்டங்கள் வழங்கினார்கள் என்றாலும், என்னுடைய எண்ணமெல்லாம்—சென்னைக் கடற்கரையில் 5, 6 இலட்சம் மக்கள் கூடுகிற மன்றத்தில், அங்கு இவரது இசைப் புலமையைக் காட்டி, அம்மக்களும் இன்புற்று, பொதுமக்கள் சார்பில் இத்தகு சிறப்புச் செய்ய வேண்டும் என்பதுதான்.

"இப்படிப்பட்ட சிறப்புக்களைச் செய்யவேண்டும் என்றுதான் நாங்கள் நெடுங்காலமாக எண்ணங் கொண்டிருக்கிறோம். அம்முறையில் முன்பு பாரதிதாசன் அவர்களுக்கு நாம் ஒரு விழா நடத்திப் பூரிப்படைந்தோம். அவருக்கு அடுத்தாற்போல் இது மாதிரி விழா நடத்துவதானால் நண்பர் இராசரத்தினம் அவர்களுக்குத்தான் நடத்தவேண்டும் என்று எண்ணுகிறோம்.

"அத்தகைய சிறப்புமிக்க நிகழ்ச்சிக்கு நீங்கள் உங்களது பேராதரவைத் தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"இந்த விழாவில் இசை விருந்தளித்து மகிழ்வித்த இசைப்பெரும் புலவர் இராசரத்தினம் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், தோழர் வேதாசலம் சார்பிலும், உங்கள் அனைவர் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

★ ★ ★

ஈழநாட்டில் ஈராறு......

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

ஏற்பாடு செய்யத் தாமதம் ஆனது. தோழர் இரா. அதி. மணி வந்து சந்தித்தார். அதற்குள் விசா காலம் முடிவடைய இருந்ததால் உடன் புறப்பட வேண்டியவனானேன். அதனால் வானொலி நிலையத்தின் அழைப்பையும் மறுக்க வேண்டியதாயிற்று.

கொழும்பு நகரில் 'செட்டி நாட் கார்ப்பரேசன்' நண்பர்கள் நடத்திய விருந்திலும் இந்தியன் பாங்க் நண்பர்கள், வலையபட்டி, புதுப் பட்டி; கண்டவராயன்பட்டி நண்பர்கள் நடத்திய விருந்துகளிலும் கலந்து கொண்டேன். இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் தோழர் அஜீஸ் அவர்களைச் சந்தித்தேன். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார். அரசியலிலே திராவிட முன்னேற்றக் கழகம் மிக நல்ல பணிகளைச் செய்ய முடியும் என்ற தனது நம்பிக்கையை அவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முன்னாள் பார்லிமெண்ட் உறுப்பினர் பதுளை சுப்பையா அவர்களின் மனைவியார் உடன் வந்து சிறப்பித்தார்கள்.

இப்படியாக இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்புவிலிருந்து புறப்பட்டேன். நண்பர்கள் கொடுத்த விமான டிக்கட் கையிலேதான் இருந்தது. இருந்தாலும், "ரயிலிலே போய்ப் பார்ப்போமே" என்கின்ற ஆசையில் ரயில் மூலமே புறப்பட்டேன். ரயிலடிக்குச் சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களும் ஏராளமான இயக்கத் தோழர்களும் வந்திருந்தனர். பிரியா விடை பெற்றுக் கொண்டேன்.

ரயில் அதிகாலையில் தலைமன்னார் வந்து சேர்ந்தது. தலை மன்னாரில் இலங்கை நோட்டை இந்திய நோட்டாக மாற்றிக் கொண்டேன். பெட்டிகள் சோதனை செய்யப்படும் இடத்திற்குச் சென்றேன். அந்த இடத்தில் 'லஞ்சப் பயங்கரம்' அதிகம். ஒருவர் நெருங்கி வந்து "ஐந்து ரூபாய் கொடுங்கள்" என்று கேட்டார். நிமிர்ந்து பார்த்தேன். அங்கே ஒரு போஸ்ட்டர் ஒட்டப்பட்டிருந்தது. அதில் "அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தால் ஏழு வருஷக் கடுங்காவல். அதற்கு நீங்கள் தயாராய் இருக்கிறீர்களா?" என்று அச்சிடப்பட்டிருந்தது. நான் அதற்குத் தயாராக இல்லை. பேசாமல் வந்து ஸ்டீமரில் ஏறிக்கொண்டேன். அந்த ஸ்டீமரிலும் மூன்றும் வகுப்பு இருக்கிறது. மாட்டுக் கொட்டிலுக்கும் அதற்கும் அதிகமான பேதம் இல்லை. இலங்கையிலிருந்து திரும்பிவந்து கொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய தமிழர்கள் அந்த ஸ்டீமரிலும் அவதிப்படுகிறார்கள். தினசரி இப்படி ஏராளமான பேர் அவதியோடு திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். மேல் வகுப்புப் பிரயாணிகள், ஸ்டீமர் தனுஷ்கோடிக்கு வந்ததும் சீக்கிரமே சோதனைகளை முடித்துக் கொண்டு ரயிலில் ஏறிவிட முடிகிறது. மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் பகல் முழுக்க அங்கேயே கிடந்து மாலை ரயிலில்தான் புறப்பட முடிகிறது. இந்தக் காட்சி தாளமுடியாத வேதனையாக இருந்தது. எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் அவதிப்படுபவன் தமிழன் மட்டும்தான். இந்த நிலைக்கு மாற்றமே இல்லையா?

தனுஷ்கோடியிலிருந்து ரயில் மூலம் காரைக்குடிக்கு வந்து சேர்ந்தேன். அங்கே முத்துராமன், கருப்பசாமி, கிருஷ்ணன் முதலியோர் வந்து வரவேற்றார்கள்.

(முற்றிற்று)

அழகப்பா கல்லூரியில் அறிஞர் அண்ணா

◉

3—2—56 அன்று காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெறும் கலைவிழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஆயிரம் மொகராக்கள்!

லெ. சந்தனம்

டில்லிமாநகரம் அல்லோலப்பட்டது சந்தைகூடும் நாள் என்றால் கேட்கவா வேண்டும்! பல தேசத்து மக்களும் வந்து போய்க்கொண்டிருந்தனர். இளவரசன் ஷாஜகான் ஆபூர்வப் பொருள்களைச் சேர்ப்பதில் ஆர்வம் உள்ளவன். ஆர்வத்தின் உந்திப்பால் சந்தையை நோக்கி நடந்தான். சீனத்துப் பட்டும், சிங்காரிக்கும் முடிமயிரும், ஆழ்கடல் முத்தும், அதை ஒத்த தந்தமும் ஆங்காங்கே இருந்து அழகு சேர்த்தன. தென்தமிழ் தோகையும் சந்தனமும் மங்கையர் மயங்க மகிழ்வுற்றுக் கிடந்தன. இந்தனையும் ஏற்கவில்லை இளவரசனின் இளமையுள்ளம். மனக்கசப்புடன் சந்தையின் கடை வாயை நோக்கினான். சிரிப்பொலி கேட்டுச் சித்தம் சிலிர்த்துத்திரும்பிப் பார்த்தான் இளவரசன். காணாத பொருளைக் கண்டதுபோலக் கண்களை அகல விரித்தான்.

டில்லி சாம்ராஜ்யத்தைப்பலமுறை சுற்றியிருக்கிறான். ஆனால், அவளைப் போல அழகுள்ள மங்கையைக் கண்டதில்லை. வண்ணப்பூக்கள் நிறைந்த மெல்லியதுணி அவள் தலை வரை மறைத்திருந்தது. கடித்துண்ணும் கட்டழகு அவளை வட்டமிட்டு மொய்த்தது. மிளகாய்ப் பழத்தின் தளதளப்பு அவள் கன்னத்தில் தேங்கி நின்று இளவரசன் மனதை உள்கொண்டு குடைந்தது. உயர்ந்தரகச் சால்வையில் வைரங்களைப் பரப்பிக்கொண்டிருந்தாள். அவள் ஒரு பாரசீகப்பைங்கிளி என்பதை அவள் உடுத்திய உடையிலிருந்து அறிந்துகொள்ள இளவரசனுக்கு நேரமாகவில்லை.

"உலகப் பெரும் பொருள்கள் என்னிடமிருந்தென்ன, இல்லாதிருந்தென்ன! அபூர்வப் பொருள்கள் சேர்ப்பதில் வல்லவன் என்று வாய் இனிக்கப் பேசலாம் இந்நாட்டு மக்கள். தேடக் கிடைக்காத இன்பப் பொருள் அதுதான் எனது அலங்கார மாளிகையை - இதயபீடத்தை அலங்கரிக்கும் இந்த மெல்லிடையாள் அல்லவா இருக்கவேண்டும். அரசர் பரம்பரை - காதல் சுதந்திரத்தைச் சுக்குநூறாகத் தகர்த்தெறிந்து அதில் சுந்தர கீதம் பாடும் கல்நெஞ்சர் கூட்டம். உரிமையை மக்களுக்கு வழங்கலாம். அதே உரிமையை அரசாளப் பிறந்த மகனுக்கு, அவனியை ஆளும் இளம் உள்ளங்களுக்குக் கொடுக்க மறுக்கிற இந்த டில்லி பீடம், சேற்றில் வண்ணமலரும், சிப்பியில் முத்தும் கிடைப்பதுபோல வணிகர் கூட்டத்தில் வந்துதித்திருக்கிறாள் என் இதயம் கலந்த இன்பராணி. ஆண்டவன் படைப்பாம்! அரசர் கூட்டத்திற்குத்தான் இதயமில்லையென்றால் படைத்த ஆண்டவனுக்குமா இதயமில்லை! இருந்திருந்தால் உரிமை கிடைத்திருக்குமே! இல்லை! நான் அரசனல்ல. சாதாரண மக்களில் ஒருவன். உயிர் போயினும் எனது உரிமையைக் காப்பாற்றியே தீருவேன். உரிமைக்காக டில்லி ஆதிபத்தியத்தைக் கட்டியாளும் நூர்ஜகான் என்ன! எந்த சாம்ராஜ்யம் என்னை எதிர்த்தாலும் பின்வாங்கமாட்டேன்" என்ற சங்கல்பத்துடன் எண்ணச் சுழல்கள் இளவரசன் உள்ளத்தில் சுழன்றுகொண்டு இருந்தன. காதல் சுழலில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தான் இளவரசன்.

வார்த்தெடுத்த சிலையைப் போலுள்ள வனிதைமுகம் நோக்கினான். பக்கத்துணையின்றி பாரசீக ரோஜா மென்னிதழ் ஊடே புன்னகையைத் தேக்கி, ஒளிவீசும் கண்களால் வைரங்களை நோக்கிக்கொண்டிருந்தாள். நல்ல சமயத்தை நழுவவிட மனம் வரவில்லை இளவரசனுக்கு. பைய நகர்ந்தான் பாவையின் இருப்பிடம். ஒளிக்கும் விழியையும், காலைக்கதிர்பட்டு வண்ணப்பிழம்பாகக் காட்சிதரும் கற்களையும் மாறிமாறிப் பார்த்தான். தனிமைப் பெண்ணிடம் இனிமை பேசினால் காதல் கைகூடுமென்ற இலக்கணம் கற்றவன். அதற்கு அஸ்திவாரமாக அவள் முகச்சாயலைத் தன் ஓரத்து விழிகளால் படம் பிடித்துக்கொண்டிருந்தான். இளவரசனின் அர்த்தமற்ற ஆராய்ச்சியில் வைரங்கள் அங்குமிங்கும் புரண்டு அலுத்தன.

எத்தனையோ நாட்டு மக்களையும், அவர்கள் பண்புகளையும் நன்றாக அறிந்தவள் என்றாலும், இளவரசனின் ஒவ்வொரு செய்கைகளும் அவளுக்கு அருவருப்பைத் தந்தன. மேல்திசை அடைந்த கதிரவனைப் பார்த்த தாமரை தலை கவிழ்வது போலத்தன் தலையைச் சாய்த்துமறு பக்கம் திரும்பினாள். வேறுபக்கம் இருக்கும் பெண்டிரைத் தன் வழி திருப்ப முயற்சிப்பதுதான் காதலில் ஆடவர்கள் கையாளும் முறை. அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பால்தான் வைரத்தை எடுத்து விலை கேட்டான். "ஆயிரம் மொகராக்கள்" என்று ரத்தினச் சுருக்கமாக பதில் கொடுத்தாள் அந்த அழகு ராணி. துடுக்குடன் தேன்மொழியைக் கொட்டுவாள் என்று எண்ணிய இளவரசனுக்கு இந்தப் பணிச்சொல் ஏமாற்றத்தைத் தந்தன. பாதுஷா ஆனாலும், பரதேசியானாலும் மாது கூறும் விலைக்கு மறுவிலை கூடாது என்ற சட்டம் ஒன்று உண்டு மொகலாய சாம்ராஜ்யத்தில். இருந்தும் காதலுக்காக சட்டத்தை மீறத் துணிந்து மறுவிலை கேட்டான். துணிந்து கேட்டவனைத் துணிச்சலாகப் பார்த்தாள். டில்லி ஆட்சியின் தன்மையறிந்தும் அஞ்சாது கேட்ட ஆணழகனைக் குறிவைத்தன அவளுடைய கருவிழிகள். இதே சமயம் கனல் தெறிக்கப் பார்த்தாள். பையிலிருந்த ஆயிர மொகராக்களை வீசி எறிந்துவிட்டு ஒருமுறை பார்த்துவிட்டுச் சென்றான் இளவரசன். இளவரசனின் குறும்புப் பார்வை அந்த மெல்லிடையைக் குறுகுறுக்கச் செய்தது. சிரித்தாள். சாதாரணச் சிரிப்பல்ல, ஏளனச் சிரிப்பு. அந்தச் சிரிப்பு, அவன் சித்தத்தை சிதைத்தது வாள்கொண்டு அறுத்தது. பலவகை உண்டியும் திராட்சை ரசமும் எதிரே படைக்கப்பட்டிருந்தன. உள்ளத்தை எங்கோ ஒப்படைத்துவிட்டு உயிரற்ற உடல் போல் அமர்ந்திருந்தான் இளவரசன் ஷாஜகான் அவன் சிந்தனை ஓட்டத்தில் அக்பரும் ஜோதிபாயும், ஜகாங்கீரும், நூர்ஜகானும் மாறி மாறிக் காட்சி தந்தார்கள். அதே சமயம் வைரம் விற்ற பாரசீக மங்கையின் உருவம் காட்சி அளித்து மறைந்துகொண்டிருந்தது. சூரியனின் இளம் ஒளி அந்த அறைக்குள் ஓடி, எதிரே உள்ள வைரத்தில் பாய்ந்து தூள்தூளாகச் சிதறி ஷாஜகான் முகத்தில் பட்டுத் தெறித்தது. அப்பொழுதுதான் தன்சுயஉணர்வு பெற்றுத் திராட்சை ரசத்தை எடுத்தான். களைப்பு நீங்க இரண்டுமுறை பருகிவிட்டு கீழே வைத்தவன் கண்கள் அகன்றன புருவங்கள் ஆச்சரியத்தால் சுருங்கின. கனவோ, நினைவோ எனக் கண்களைக்கசக்கினான், சற்றுத் தளர்வோடு. வாங்கிவந்தவைரத்தை உற்றுநோக்கினான். கசிந்து நின்று காட்சி அளித்தது கன்னிகை கொடுத்த வைரம். வைரங்களையும் வைடூரியங்களையும் அள்ளி அள்ளிப் பார்த்து அணிந்தவன். ஆனால் சூரிய ஒளியில் கசியும் வைரத்தை இன்றுதான் கண்டான்! வியப்பின் கோட்டைத் தாண்டுமுன் கசிவிலே எறும்புகள் மொய்க்கத் தொடங்கின. பொருள்களின் தரம் அறிந்து மதிப்பவன், அரசியல் நிபுணன் என்று மொகலாய சாம்ராஜ்யமே புகழப்படும் ஷாஜகான், ஒரு கற்கண்டுத் துண்டிற்காக ஆயிரம் மொகராக்களைக் கொடுத்துவிட்டோமே! அதிலும் சாதாரணப் பெண் என்பதை நினைத்து நினைத்து வெட்கமடைந்தான், வேதனைப்பட்டான். ஆத்திரம் அலைமோதியது. சாதுரியமாக விற்ற அந்த சாமர்த்தியக்காரியை அழைத்துவர ஆட்களை ஏவினான்.

பனிநீர் தெளித்த பட்டு மஞ்சம் பக்கத்துக்கொன்றாக அன்றலர்ந்த அழகு மலர்க்கொத்து. துன்பத்தைப் போக்கி இன்பத்தை எட்டிப்பிடிக்கும் உயர்ந்தரக மது. வந்தவர்களை வரவேற்று உபசரிக்கும் சிற்பங்களும், ஓவியங்களும் நிறைந்திருந்தன அந்த அறையில். தெளிவிலா நெஞ்சத்தோடு அங்குமிங்கும் உலவினான். சற்று கண்களை மூடிக்கொண்டு, வந்தவளை எப்படி வரவேற்பது என்பதில் ஆராய்ந்தான் ஷாஜகான். காலடிச் சப்தம் கேட்டுக் கண்விழித்தான். வெகுண்ட பார்வையோடு பதைபதைத்து நின்றாள் அந்த வேல்விழியாள். மன்னன் மகனெனத் தெரிந்ததும் வெடவெடத்துத் தலை குவிந்து நின்றாள். கண்சாடை காட்டினான். காவலர்கள் ஏகினர். மான் சிக்கிவிட்டது! வெற்றிச்சிரிப்புச் சிரித்தான். அந்த அறையே அதிர்ந்தது. நடுங்கினாள் நங்கை. "கற்கண்டுத் துண்டைக் கற்களென ஏமாற்றி வாணிபம் புரிந்த வனிதையே அரசன் மகன் என்று கண்டுகொண்ட நடுக்கமா? இல்லை ஏமாற்றிய குற்றத்திற்குக் கிடைக்கப்போகும் தண்டனையைப் பற்றி நடுக்கமா?" என்று குமுறினான் இளவரசன். கண்கலங்கி நின்றாள் கனகமேனியாள். "மன்னிக்கவேண்டும்" என்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கூறினாள். அந்த ஒரு சொல்லுக்குத்தான் ஏங்கிக்கொண்டிருந்தான் ஷாஜகான். அவள் சிந்திய சிறிய சொல்லில் சொல்லவொண்ணா இன்பம் கண்டான். சரி, உன் பெயர் என்ன என்று கனிவுடன் கேட்டான் இளவரசன். "எனது பெயர் பானு. மும்தாஜ் என்று அழைப்பார்கள். பிறந்து வளர்ந்தது பாரசீகம். வயிற்றுப் பிழைப்பிற்கு வைரம் விற்கிறேன். தவறாக நடந்துவிட்டேன். இதோ இருக்கிறது. வேண்டிய கற்களை எடுத்துக்கொள்ளுங்கள் என்று வடநாட்டுச் சிப்பந்திக்குத் தலைசாய்க்கும் தென்னாட்டு முதல்வர்போல வைரங்களை எடுத்துப் பரப்பினாள்.

"பயந்துவிட்டாய் பைத்தியக்காரி! யாரும் தீட்டமுடியாத கற்கண்டு வைரத்திற்குச் சன்மானம் அளிக்கப் போகிறேன். இப்படி உட்காரு" என்றான் ஷாஜகான். ஆசையைக் காட்டி பாசம் வளர்க்கச் சூழ்ச்சி நடக்கிறது என்று பேசாது நின்றாள். என் நிற்கிறாய்? என்ற அரசர்க்குரிய பாணியிலே கேட்டதுதான் தாமதம், எதிரிலுள்ள ஆசனத்தில் அமர்ந்துவிட்டாள் மும்தாஜ். "மும்தாஜ்! ஏழ்மைத் தடாகத்திலே அழகு மணம் பரப்ப வந்த இன்னழகே! உனக்கு வேண்டியதைக் கேள்! அரசியாக வேண்டுமா? அந்தப்புர சுந்தரியாக வேண்டுமா? எது வேண்டும்? அதுவும் இந்த சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டதாக உயர்ந்ததாக இருக்கவேண்டும்" என்று அழகு மொழியிலே அரசர் தன்மையிலே கூறினான்,

"இளவரசே! அந்தப்புரத்தை அழகு செய்யும் ரோஜாக்களுக்கா பஞ்சம் தங்கள் சாம்ராஜ்யத்தில்? நானோ ஒரு காட்டுப்பூ. மணமாகி மாலையாகப்பட்ட மலர்" என்று கூறிக்கொண்டே ஜன்னலைப் பார்த்தாள். பளிச்சிடும் மின்னல்களுக்கூடே மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. பார்த்தான் ஷாஜகான். பருவத்தில் கனிந்துநிற்கும் அந்தத் தங்கச்சிலையை நன்றாகப் பார்த்தான். பசி எடுத்தது பாராளும் மன்னன் மகனுக்கு. "மும்தாஜ் இதைச் சாப்பிடு" என்று மதுக் கிண்ணத்தைக் கொடுத்தான் அவன். கூறுவது மன்னன். அவளோ கூண்டுக்கிளி எப்படி மறுக்கமுடியும்! பயந்தவளாய் பருகத் தொடங்கினாள். சுற்றி வளைத்த நாணம் சோர்வையைத் தூண்டியது. கண்கள் செம்பவளமாய்க் காட்சி அளித்தது. வாடிய கொக்கு வந்த மீனைப் பார்த்தது. கண்ணே என்றான் மது தூண்டிய இன்பத்தால். "ஆ" என்றாள் அந்தப் பைங்கொடி. அதில்தான் எத்தனை கருத்துகள் நிறைந்திருந்தன. பக்கத்தில் அமர்ந்தான். பாவையும் சாய்ந்தாள் பரந்த மார்பில். வலையில் வீழ்ந்தது அந்த வண்ணப்பறவை. கரம் கொடுத்து அணைத்தான். கற்கண்டைப் பதித்தான் சுவைக்கச் சுவைக்கத் திகட்டாத கனி இதழ் ஓரத்தில். சிதறிப் பறந்த சிகையைத் தன் கையால் ஒழுங்குபடுத்தி எந்திழையின் எடுப்பான மூக்கிற்கு நேராக முகத்தை வைத்தான். இன்பக்கோட்டினை அடைய இறுகத் தழுவினாள் அந்த இளங்கொடி. உடைகள் தளர்ந்தன. பேச்சுகள் மறைந்தன. பசித்த கிளி திகட்டுமளவிற்குப் புசித்தது தீங்கனிச்சுவையை. சிப்பாயின் காலடி கேட்டு விழித்தாள் மதுவால் மதியிழந்த மும்தாஜ். தன் நிலை உணர்ந்து எண்ணி எண்ணிக் கண்ணீர்விட்டாள். இருள் சூழ்ந்தது. அதற்குத் தன்னையே ஒப்பிட்டாள். ஆனால் இந்த இருளுக்குப்பின் இந்த சாம்ராஜ்யமே ஒளி வீசப் போகுமென்று நினைக்கவில்லை. அரசனின் அன்பிற்காக வருங்கால மக்களின் உள்ளத்தில் அழியாத இடம் பெறுவோமென்று நினைக்கவில்லை. ஆனால் அவள் நினைவெல்லாம் இளவரசனால் வஞ்சிக்கப்பட்டோம். எப்படிப்பாரசீகம்சென்று கணவன்முன் விழிப்பது என்பதிலேவட்டமிட்டுகொண்டிருந்தது. இவற்றையெல்லாம் பார்த்துக் கேலி செய்வதுபோலத் தவளைகள் கத்திக்கொண்டிருந்தன.

"மகராஜ்" என்ற குரல் கொடுத்தான் சிப்பாய். சிந்தனைசிதற வடியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு திரும்பினான். "தந்தையார் மாண்டுவிட்டார்" என்றான். "தொலைந்தது சைத்தான்" என்று கூறிவிட்டு, தாஜ்மகாலை ஒருமுறை பார்க்கத் திரும்பினான் ஷாஜகான். "டில்லி பாதுஷாவே சென்று வாருங்கள்" கனிவான குரலில் விடை கொடுப்பதுபோல இருந்தது அவனுக்கு. குபுகுபுவென்று கண்ணீர் கொட்டியது பாதுஷாவின் கண்களிலிருந்து. கலகலவென்று வெண்ணிலவைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஓடியது யமுனாநதி.

★

22. அண்ணாவிற்கும் ஏதேனும் ஒரு பொருளுக்கும் சிலேடை.

வெண்பாப் போட்டி 22-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

மூன்றெழுத்தி லொன்றி மிளிர்தலால்; மேன்மக்கள்
நன்றி நனிமிகவே நல்குதலால்;-சென்ற
விடமெல்லாம் வாகை வளர்தலால்; தமிழ்க்குத்
தடக்தோளர் அண்ணா தகும்.

—கவிதையன்பன், திருச்சி.

★

இனஉணர்ச்சி உண்டாக்கும்; வீரவுரை ஆற்றும்
கனல்கக்க! வாழ்க்தவிதம் காட்டும்;-மணக்துவரும்
தென்றல் நடைபொழியும் தென்னூல் இலக்கியமும்
அண்ணாவும் ஒன்றெனக்கொள் ஆய்க்து!

—இரும்பிடர்த் தலையன், அரக்கோணம்.

★

தோன்றின் முகமலரும் தோன்றுமுன் தூக்கமுறும்
ஈன்றூர் தனைப்போல் இறங்கிவிடும்-வான்தோயும்
தன்னை முனிக்தாலும் தான்முனியா தாதலினால்
அண்ணாவும் ஆதவனு மாம்.

—ப. வேலாயுதம், மலையநத்தம்.

★

சிற்றுருவம் பெற்றிருக்தும் சீர்த்தி பலபெருக்கி
நற்றமிழ்ச் சொல்லெல்லாம் நாடுமறம்-நற்பொருளும்
வண்ணமுறு இன்பமும் வாரிவரும் ஆதலினால்
அண்ணாவும் ஆர்குறளும் நேர்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

தாக்கத் தளராது தாரணியைக் காத்துநிற்கும்
ஆக்கம் பிறக்கிக்(து) அமைதியுறும்-பார்க்கின்ற
கண்ணுக் கழகிலதாய்க் காடுவளர் மாமலையும்
"அண்ணா"வும் ஒன்றும் அறி.

—முருகு, வரகூர்.

★

துஞ்சிக் கிடக்தோர் துடித்தெழச் செய்ததனால்,
மிஞ்சவே கேருளதைக் காய்தலால்-வஞ்சி
குணவரையில் காணும், மதியொளிர வைக்கும்
தினகரனும் அண்ணா துரை.

—கலிப்பகை, மேட்டூர்.

★

குறுகிய தோற்றத்தால் கொட்டிடும் சத்தால்
உறுதுணை செய்யும் உயர்வால்-மறுவேது?
புல்லெனத் தள்ளாது போற்றி நிலத்தின்கண்
நெல்லெனஅண் ணாவை நினை!

—எ. பார்த்தசாரதி, கரூர்.

★

எண்ணிடுங்கால் நெஞ்சுயரும் ஏவிடுங்கால் நாடசையும்
முன்னிடுங்கால் பின்னென் றும் மாற்றே-எண்மை
இருளுக்(கு) ஒளிவிளக்காம் எம்மதமும் ஒன்றும்
பொருளுக்கு(ம்) அண்ணா பொருள்.

—மணக்கரை, அம்பலவாணன், அயன்வரம்.

★

செம்மலரின் தீஞ்சுவையைத் தெள்ளி மிகவெடுத்து
நம்மவர்கள் உண்ணுதற்கு நன்களித்து-எம்மருங்கும்
பண்ணோசை தந்தும் பயனென்றும் வேண்டாதால்
அண்ணாவும் வண்டும் நிகர்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி.

வானுயர்வால் செக்கிற வாயுளதால் மக்களரண்
தானெனலால் வெண்ணுடையால் தாய்நாட்டின்
[கோணம்

கண்ணாரும் ஏத்துதலால் நன்னூல் புகழ்கிடலால்
அண்ணாவும் பேரிமைய மாம்.

—வ ம. அரங்கநாதன், வேப்பேரி

★

துஞ்சுசீர் ஞாலத்துத் தொல்புகழ் காத்திடும்
கொஞ்சுதமிழ்ப் பண்ணோடு கொய்திட்ட-நெஞ்சின்
அறிவை நிலத்தோர்க் களித்திடும் அண்ணா
குறளுக் கிணையென்று கூறு.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

★

அளவில் குறைக்துளதால் ஆன்ற கழுத்தால்
பிளவுற்ற பின்னும் புதுமையால்;-உள்கருத்தை
நன்கு விளக்குவதால் நம்மக்கள் போற்றுவதால்
அண்ணாவும் பேனாவும் ஒன்று.

—ச. மா. அருணன், நடந்தை.

★

மணியாம், ஒளிகாட்டும் மற்றைப் பொருள்விளக்கும்
அணியாகும். மாக்தருக் காக்கம்-தணியாத
கெஞ்சத்து ஆவல் நிலைகாட்டும் அண்ணாவைக்
கண்ணுக்கு நேரெனவே காண்.

—க சு. இளவழகனார், சிதம்பரம்.

★

காலைக் கதிரவனுய்க் காரிருளைப் போக்கியதி
காலை மலரும், களிப்பூட்டும்;-நிலவுலகில்
தன்னொளியில் தென்னகத்தில் தன்னாட்சி யேற்கவரும்
அண்ணாவும் ஞாயிறெனப் போற்று.

—செ. சீனிவாசன், சலகண்டபுரம்.

★

கருத்தாழ்க் திருக்கும் கவின்பொருள்கள் காணும்
செருத்தார் பிழைத்தல் அரிதாம்-உரத்தோடு
'தாழ்வதனைப் போக்கத் தயங்கோம்' எனமுழங்கும்
நீள்கடலும் அண்ணாவும் நேர்.

—சி. சிதம்பரம், காரைக்குடி.

★

பொன்னார் பொலிவுமிக்கான் பூதலத்தி ருட்போக்கக்
கண்ணாரான் காசினிக்குக் கண்ணாவான்-செங்கரத்தால்
பெண்ணாள் கதகதப்பைப் பெற்றிட ஈவான்நம்
அண்ணாவும் ஆதவனு மாம்.

—த. மருதமுத்து, கடூர்.

★

அறிவுக்கு ஆற்றலாகும்; இன்பஉரி மைக்குச்
செறிவாகும்; பல்மக்கள் ஏற்றும்-அறிவுடையாய்!
விண்ணதிரும் சட்டத்தால் வேராப்பர்; எங்களது
அண்ணாவே ஆர்க்கும் சுவடி.

—அலை, சித்தாத்தூர்.

★

கணவர் தமையருடன் காத்துவக்த தக்தையரும்
புண்பட்டுப் போர்க்களத்தில் போயினபின்-கண்ணாக
எண்ணும் புதல்வனை ஏவிய பெண்ணுக்கு
அண்ணாவே நேரென் றறை!

—செ. குமரவேல், வாணியம்பாடி.

★

வற்றாத நீரேக்தி வண்டமிழ் நாட்டினிடை
சிற்றூரும் பேரூரும் செல்கின்றாள்-பெற்றவளாய்
தென்னகத்து மக்கள் துயரைத் துடைக்கின்ற
பொன்னியை அண்ணாவென் போம்!

—வெ. வெங்கிடசாமி, பாலையம்பட்டி.

★

வல்லோரும் போற்றும் வளமுள்ள திண்மையால்
நல்மனதாய் ஊரின் நடுநின்று-எல்லோர்க்கும்
ஒப்பற்ற பாடமாய் ஓங்கிநிற்கும் ஆலதனை
ஒப்பிடுவர் அண்ணாவென் றேது!

—சிவந்திபட்டி மாறன், மப்சாபுரம்.

★

இருள்விட்டி நெஞ்சில் எழுச்சிவரச் செய்து
பொருள்காட்டி வாழ்வு பொலியத்-திருவாக்கும்
நற்செய்கை யாலே நமதறிஞர் அண்ணாவும்
பொற்கதிரும் ஒப்பரெனப் போற்று

—வித்துவான்-வெங்கடேசன், நெல்லிக்குப்பம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், எ. எம். எம். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6